குடிஅரசு

V1. No. 40 4 Oct 1928

JL
[illegible] 211, NR8 KN
N 28.1.40
189023

1006

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வரு அக்டோபர் மீ 4உ [No. 40.

2 NOV 1928 MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	781	5.	சூர்ப்பநகை. R. முத்தையர்	789
2.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A.,B L.	783	6.	தமிழ்ப் பாடம்.	791
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	785	7.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	794
4.	அரிஸ்தோத்லன். T. R. இராஜகோபால்	787	8.	மலர்வனம். "மதுகரம்"	796
			9.	வர்த்தமானம்.	799

189023

கலா நிலயம்.

அரசியலும் அரவிந்தரும்.

I

வேறுபட்ட ஜாதியாலும் மாறுபட்ட கொள்கையாலும் பல்வகைக் கட்சிகள் அரசியல் வாதத்தை மேற்கொண்டு விவகரித்து வருகின்றன. ஆட்சி முறை மேன்மையுற வேண்டுமென்பதே தம் கருத்தென இவ்வரசியல்வாதிகள் சொல்வர். அரசியல் என்றாலே யாவதென்பது தெரியாமலும் அதற்குற்ற மேன்மை இன்னதென நினைக்கவே வகையற்றும் இருக்கின்ற மாந்தர்களிற் பலர் தாம் அரசியல் வாதிகளென்று ஆரவாரம் செய்கின்றதைப் பார்க்கின்றோம். அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் இயம்ப வேண்டியதில்லை.

மற்று, இவ்வரசுமுறைக் கொள்கைதான் யாது? நாட்டிலுள்ள மாந்தர் யாவரும் அவரவர் தத்தம் அறிவு ஆற்றல் உடைமை ஆகியவைகளில் ஒரு பகுதியை எடுத்து மற்றவர்களது நன்மையின் நிமித்தம் அளிக்க, அதனைச் சேகரித்துப் பல்லோருக்கும் பயன்படுமாறு வகுப்பதே அரசு முறைக் கொள்கையென்பர். கொள்கை யளவில் இது வாய்மையாயினும் ஆகலாம். ஆனால் செய்கையின் திறத்ததாய நடைமுதலில் இதனுண்மை தெரியக் கிடக்கவில்லை. சிற்சிலர் ஒன்றுகூடித் தாம் எந்தக் கட்சிக்கு உழைப்பதாகச் செப்பிப் பிரதிநிதித் தன்மை கொண்டாடுகின்றார்களோ அக்கட்சியைச் சேர்ந்த பொதுஜனத் தொகுதியின் தலையில் தமது கருத்தைச் சுமத்தித் தம்முடைய சுயநல ஆசையை வளர்த்துக்கொள்ளவே பெரும்பாலும் முடிகின்றது. இவ்வகைத்தலைவர் வெகுநாள் ஆண்டு வந்த பரம்பரையைச் சேர்ந்த சிறப்பினர்களாயிருப்பினும் ஒன்றுதான்; அல்லது சாதாரண பொதுமக்கள் குடியில் பிறந்தும் தம் சுயகுண வன்மையாலேனும் சந்தர்ப்பச் செவ்வியாலேனும் முன்னிற்க நேர்ந்தவராயிருப்பினும் ஒன்றுதான். இருவருமே அந்தத்தில் தம் தன்மையில் பேதமின்றி விவகரிக்கின்றனர். இதுவுமல்லாது, தமது நாட்டத்தையும் கருத்தையும் பொது ஜனங்களின்மேல் சொல்வன்மையால் மயக்கிச் சுமத்துவதற்கும், கைவன்மையால் வற்புறுத்திச் சுமத்துவதற்குங்கூட யாதும் பேதமிலது. எது எவ்வாறாயினும், மாந்தர்களைத் தம் வயப்படுத்தி ஆள்கின்ற இவ்வகுப்பினர், தேசத்தினர்களது உத்தமமான புத்திக்கும் மேன்மையாய இலக்ஷியத்திற்கும் உயர்தரு முணர்ச்சிக்கும் பிரதிநிதிகளாய் அமைந்திருக்கின்றனர் என்னும் நிச்சயம் இல்லை.

காதிற் கேட்பதையும் கண்ணிற் படுவதையுங் கடந்து கருத்தூன்றித் தேர்வார்க்கு இதனுண்மை தெரியவரும். சிறப்பாகச் சிற்சிலர் உத்தமர்கள் இருப்பது இயலுமெனினும் பொதுவாக அரசியல் வாதிகளின் தன்மையை ஸ்ரீமான் அரவிந்த கோஷ் நுண்ணிதின் ஆராய்ந்து வருணித்திருக்கின்ற வாக்கியங்கள் இப்பொழுது எம் நினைவிற்கு வருகின்றன. அவர் கூற்று இந்த நாட்டிற்குத்தான், இந்தக் கட்சியினர்க்குத்தான், இந்த முறைக்குத்

தான் ஏற்றது என்று இல்லாது, உலகமடங்கலும் உளவாயதோர் செய்தியைச் சார்ந்திருத்தலால், நடுநிலை தவறி ஓரஞ்சார்ந்து அவர் பேசினார் என எவரும் மதித்திடார். அன்னார் உரையை இங்கெடுத்து வரைவது அமையும் :—

“ தேச மொன்றினுள் நிலவுகின்ற மெய்ப் பெருமைக்கும் உள்ளுணர்ச்சி நுண்மைக்கும் அகன்ற காட்சிக்கும் பிரதிநிதிகளாய்த் தற்காலம் அரசியல்வாதிகள் உலவுகின்றனர்களென்று இவ்வுலகத்தி னெப்பாகத்திலும் துணிந்து கூற இயலாது. பொது ஜனங்களின் ஆன்ம உணர்வினையேனும் அவ்வான்மாவிற்குரிய தாகத்தினையேனும் தாமேற்று அவைகளைத் தெரியக்காட்டி நிற்பாரல்லர் இவ்வரசியல்வாதிகள். மற்று, அவர் எவைகளைத் தெரியக் காட்டுகின்றனர் எனில், தம்மைச் சாதாரணமாய்ச் சூழ்ந்து நாற்புறத்திலுங் கிடக்கின்ற, அற்பத்தனம், சுய லாபப் பேராசை, அகங்காரம், பேதைமை முதலியவைகளையே யாம். இத்தகைய தன்மைகள் தம்மிலே குறைவின்றித் தோன்ற நிற்கின்றனர் இவர். இவைக ளெல்லாமல் திறனிலா மனமும் ஊக்கமற்ற தர்மமும் புல்லியபயமும் போலிவேடமும் இவர்களுக்கிடையே பரக்கக் காணலாம். தக்கபடி தேர்ந்து முடிப்பதற்காகப் பெரும்பெரும் காரியங்களை இவர் மேற்கொள்ள நேர்கின்றது. அவர்களோ அவைகளைப் பெருமையுடன் கையாள்வதில்லை. மேலாய மொழிகளும் உயரிய கருத்துக்களும் அவர்களது வாய்வழி வந்த வண்ணமா யிருக்கும். ஆயினும் அவைகளெல்லாம் வெகு விரைவில் தம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஆட்டிஆட்டிக் காட்டும் ‘கிலுகிலுப்பை’ களாகவே முடிகின்றன. அரசியலைப் பற்றி வாதித்து விவகரிக்கின்ற இவ்வாழ்க்கையில் இன்னபடி பொய்யாய பெருநோய் மலிந்து கிடப்பது தற்காலம் இவ்வுலகின் ஒவ்வொரு தேயத்திலும் வெள்ளிடை மலையாகத் தோன்றுகின்றதே. அப்படி யிருக்கப் பகுத்தறிவும் புத்திநுட்பமும் வாய்ந்தவர்க ளென்று கருதப்படவேண்டிய மாந்தர்கள் இந்தக் கபடநாடகப் பகட்டிற்கு உடன்பட்டு வசியமா யிருப்பது என்ன மந்திரமோ, யார் செய்த மாயமோ தெரிந்ததில்லை. வழக்கமாய் வருகின்ற எதையும் வரவேற்று அநுசரிக்கின்ற இது வியாதியைப் போர்த்தி வைத்து வளர்த்து வருகின்றது’’.

ஸ்ரீ அரவிந்த கோஷ் உலகத்திற் கெல்லாம் பொதுவாக இவ்விதம் அரசியல் வாதங்களை வகுத்தாரேனும் இக்காலம் இவ்விந்திய நாட்டின் அரசியல் விடயங்களின் முதன்மையாய் நிற்கும் பல பெரியோர் இவ்வகைக்கு முற்றிலும் பாத்திரராவார்களோ எனும் ஐயம் எமக்குண்டாகின்றது. வகைதுறை தெரியாத பலர் மூலைக்குமூலை “நாம் நாம், நான் நான்’’ என்று கத்திக்கொண்டிருக்கின்றனர், உண்மையே- தனியாய் இரைதேடினால் கிடைப்பதரியதா யிருக்கின்றதெனத் தெரிந்து தன்னினத்தின் பேரைச் சொல்லித் தன் வயிற்றிற்கே வழி தேடுகின்ற வாயுடையர் பலர் தலைவரெனத் தோன்றி யிருக்கின்றனர் என்பதையும் மறுக்க இயலாது. தாம் தாம் மேற்கொண்ட முறைகளைக் கையாள்வதில் வெறுப்பதற்கே ஒத்த அற்புதத்தி காட்டுகின்றவர்களும் எண்ணிறந்தோர் எங்கு மிருக்கின்றனர். புழுதி கிளப்புவதற்கென்று படர்கின்ற இவரனைய படைகளெல்லாம் கிடக்க, அறிவாலும் ஆற்றலாலும் தர்ம சிந்தனையினாலும் முன்னோங்கி நிற்கும் நிலைக் குரியவராய்ப் பொதுஜனத் தொகுதிக்கு அவர் கருதியபடி நன்மை சில நயந்து செய்ய முயல்வார் இந்நாள் இலரென்று சாற்றிவிடல் தகைமை யன்று.

ஆயினும் என்! நாட்டினது இடுக்கண்களைக் களைய வேண்டும் என்னும் உண்மை நட்பு வாய்ந்த இப்பகுதியினோர் நோக்கம் தூயதே யாயினும், அந்நோக்கத்தைக் கடைப்பிடித்த தாளாண்மை அதிகமே யாயினும், அத் தாளாண்மை தளராமல் முயல்கின்ற முயற்சியும் பழுதற்ற வழியிலே பாய்கின்ற தாயினும், அவர் நினைத்த நன்மைக்கும் நாட்டினது நிலைக்கும் இடைநின்ற தூரம் சுருங்கக் காண்கிலேம். அதுவன்றி அவை எதிரெதிர்த் திசைநோக்கிப் பிரிந்தகல்வதையும் காண்பதாகக் கூறுவர் சிலர். உணர்வும் அறிவும் உண்மையும் அற்றவர்கள் தலைவராய் முன்னின்று அரசியல் கட்சிகளில் விவகரிக்க, அறிவுடைய மாந்தர் பலரும் உடன்பட்டுஇடந்தருவது, என்ன மந்திரமோ, யார் செய்த மாயமோவென்று வியந்துளார் ஸ்ரீ அரவிந்தகோஷ். அதனிலும் வியப்புடையது, ஆழ்ந்த அறிவிலும் உண்மை அன்பிலும் சிறந்து விளங்குஞ் சிலர் வீணென்று நாடோறும் தெரியவருகின்ற இவ்வரசியல் முறைகளென்னும் கானல்நீரை மொண்டுவந்து மாந்தரின் தாகத்தைத் தணிக்கத் தளராமல் முயன்று வரும் அச் செய்தியாகும்.

இவ்வாறு இவ்வுத்தமர்கள் படும் பாடெல்லாம் அவலமாய்ப் போவதற்குக் காரணங்கள் எவையென்று நாமறிந்தபடி நமது தலையங்கங்களின் பற்பல இடங்களில் காட்டி வந்துளோம். ஆனால், அரசியல் வாதிகளை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து ஓரே இனமாய்ப் பழி யேவுகின்றவர் ஸ்ரீ அரவிந்த கோஷ் ஒருவரே யல்லர். இவ்வரசியல் வாதிகளுமே தம்மில் ஒருவரை யொருவர் பொதுவிடங்களிற் சிலரும், தனிபறைகளிற் பிறரும் பழித்துக் கொள்கின்ருராகையால் இதனிற் சிறிது உண்மையுந்தா னுளதோவென அயிர்த்தல் மிகையாகாது.

ஆயினும் அப்பழிக்கு அவர் உரியவராதல் இழிபடு செயல்களை நயந்து செய்வதாலன்று. அது அவர்நிலைக்கே உரியது. ஒன்று நினைக்க ஒன்று வந்து சேர்கின்ற விபரீதம் அரசியல் வாதத்திலும் நெறிபிறழாமல் நடப்பவர் மாட்டும் காண்கின்றோம். விலக்கரிய வகையில் இது அரசியல் வாதத்தினூடே வியாபித்திருப்பதால் எத்தகைய மாண்புடையவராயினும் அவர் உலகோர் பழிக்கேனும் மறுதிறத்தோர் வசைக்கேனும் ஆளாகா தமைதல் ஆவதொன்றன்று. குட்டையி லளைந்தவன் சேற்றினைப் பூசாது தீராது. ஆயின், அரசியல் வாதச் செய்திகள் அளாருகிக் குழம்பிக் கிடப்பதற்குக் காரணம் உணர்வோமாயின் யாவும் தெருண்டவராவோம். சேறுடைய குட்டையைப் பழிப்பவர் இலர் ஆனால், நன்னீரென்றதனி லிறங்கிச் சேறு பூசிய உடலினனுய்த் தோன்றுகின்ற ஒருவனையே நோக்கி யாவரும் பரிகசிக்கின்றனர். எனின், அரசியல் வாதத்தி லூடாடும் வாழ்க்கை சேருனவாறு யாவதென இனிச் சிந்திப்போம்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப் படலம்.

(776-ம் பக்கத் தொடர்ச்சி.)

தன்கைச் சுடுசர மனையசொல் தாழ்ந்திலன்.

வல்லரக்கித் தாடகையின் மார்பிலுற இராகவன் எய்த வாளியின் திறமும் அது பாய்ந்துருவிப்போய பரிசும், இவைகளுக் கியைந்த உவமைகளுந் தோன்றுமாறு,

சொல்லொக்குங் கடிய வேகச்
சுடுசரங் கரிய செம்மல்
அல்லொக்கு நிறத்தி னுண்மேல்
விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கு நெஞ்சிற் றங்கா
தப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே.

[கருநிறந் திகழும் இராமன், சொல்லையொத்த கடிய வேகத்தையுடைய பாணத்தை இருளை ஒத்த நிறத்தையுடைய தாடகையின்மீது விட்டதும், அது வயிரம் பாய்ந்த குன்றிலிருக்கும் கல்லுக்கு நிகரான அவளது நெஞ்சில் சிறிதுந் தங்காது ஊடுருவிக் கல்லாத புல்லர்களுக்கு நல்லவர் சொன்ன பொருளுரைகளைப்போல் அப்பால் போயிற்று]

என்று கம்பர் பாடிய பாசுரம், ஓதுவோர் கருத்தினில் தங்கவே தக்கது. அப்புறங்கழன்ற இவ்வாளி எங்குற்ற தென்பதைப் பின் சனகனுக்குக் கோசிகன் இச் செய்தியை எடுத்தியம்புங்கால். “தாடகைதன் உரமுருவி மலையுருவி மண்ணுருவிற் றொருவாளி’’ என்று செம்மாந் துரைத்து முடித்தலால் மூந் நூறு செய்யுள்களுக் கப்பால் கம்பர் தெரியக் காட்டுகின்றார். ஒருபுறம் பட்ட மாத்திரத்தில் இறையுந் தங்காது அப்புறங்கழன்று ஓடிவிடுதற்கு வாயுவேகம் மனோவேகமென்று தொன்றுதொட்டு வழங்கும் வாசகங்களெல்லாம் கம்பருக்கு ஏற்றனவாய்த் தோன்றாதது புதுமையன்று. ஒருகால் கம்பர் கல்லாத கயவருக்குத் தன் கவிகளைச் சொல்லிச் சொல்லிச் சலித்துப்போய்த் தன் சலத்தைத் தாடகையின் மார்பிற் பாய்ந்த இராமபாணத்தோடு சாதித்துக் கொள்கின்றனரோ, யாதோ! இவ்வாறே கச்சியப்ப சிவாசாரியாரும் பாலிமா நதியின் பெருமையைப் பகர்ந்து முடிக்குங்கால் அது கடலை நோக்கி விரைந்திடுங் கொள்கையை,

வேறுகொள் புலனை வென்றோர்
மேலைநன் னெறியுய்த் தாலும்
தேறிய வுணர்வி லாதோர்
செல்வழிச் செல்வ ரன்றே.

என்ற எடுத்துக் காட்டும் செவ்வியால் சிவநெறியைக் கேட்டும் அதற்கு ஈடுபடாதவர் புன்மையைக் கூறி இரங்கலாயினர்.

இராமன் விடுத்த சரம் கடிய வேகத்தாலும் சுடுகின்ற தன்மையாலும் சொல்லை யொத்தது என்னுங் கம்பர், எந்தச் சொல்லை நினைத் துவமையாக்கினர் என்பதைக் குறிக்காமல் விட்டதேனென்று விளங்கிற்றில்லை. ஓதுவார் உணர்விற்கேற்க ஊகித்துக் கொள்ளட்டும் என்பது அவர் கருத்துப்போலும். தாடகையைக் கொல்வதற்குத் தூண்டிய விச்வாமித்திரனது சொல்லுக்கு நிகரானவோர் பாணத்தை இராமன் ஏவினுன் எனக்கொள்ளின் பிழையாகாது. ‘அரக்கியைக் கோறி’ என்று அவன் உரைத்த கடிய வேகமும் அதைக்கேட்டு இராமன் மனதில் உண்ட சுடுகையும் அவ்வம்பிற் புகுந்து பாய்ந்ததும் பொருந்தும். மற்று, ‘ஒரு சொல் ஒருவில் ஒரு இல்’ என்னுஞ் சிறப்பிற்கிடனாகிய இராமனது சொல்லைப் போன்றே தவருததும் மற்றொன்று வேண்டாததுமான தன்மையில் அவன் வாளியும் வாய்மையே ஒத்த தென்பதும் தக்கதே. ஆயினும் உய்த்தநெறி பிறழா வகையொன்றிற்றான் இராமன் சொல்லும் வில்லும் ஒத்தனவோ, வேறுஞ் சில வொற்றுமை அவைகளுக்குளவோ எனும் ஐயம் ஏற்படுகின்றது. அவன்விடு சரத்திற்கு அடைமொழிகளா யமைந்த வேகமும் சுடுகையும் அவன் சொற்களின் தன்மையாகவுமிருத்தல்வேண்டும். கம்பர் கற்பனையாய் நிகழ்கின்ற இராமனது குணவொழுக்கங்களை ஆழ்ந்து ஆராயுங்காலையில், சிறிதுந் தாழாது ஏற்றவுரை கடிதின் எதிர் வழங்குஞ் சொல்லாற்றலும், அச்சொல் சிற்சில சமயங்களில் கேட்போர் செவிவழிச் சுடச்சுடப் புகுவதும் அவனுக்கு இயற்கையா யமைந்திருத்தல் புலப்படும். விச்வாமித்திரன் சிறிது முன்னரே இவ்வகைச் சுடு சொல்லிற்கு இலக்கா யிருந்திருக்கின்றான். “ அறனல்லவும் எய்தினுல், அதைச் செய்க வென்றேவினுல், மெய்ய, நின்னுரை வேதமெனக் கொடு செய்கை யன்றோ அறஞ் செய்யுமாறு’’ என்று உரைத்த குரலிலும் பொருளிலும் பணிவு தோன்றுகின்ற தெனினும், “ ஆறி நின்றது அறன் நன்று (அல்லது அன்று)’’ என்று கோசிகன் கூறியதற் கெதிராக வெகு விரைவில் “எனக்கு நலந்தீமை யொன்றும் நீ எடுத்துக் காட்ட வேண்டா. நீ காட்டுங் காரணங்கள் தகவுடைத்தென என்னால் எண்ண இயலவில்லை. நீ சொல்கின்றதை மறுக்கப்படாதென்று என் கடனைக் கழிக்கின்றேனேயன்றி, மனமொவ்வி நானிப்பழிச்செயலுள் படுவேனென்றெண்ணற்க’’ என்னுங் கருத்து அச்சொற்களினுள் ளுறைந்திருக்கின்ற தென்பதை அறிவ தருமையன்று. இச் சொற்களின் சுடுகையைக் கோசிகனுணர்ந்தனன் என்பதற்கும் ஆதாரமுமுளது. நிரந்தர மூலகினிற்கு நெடும் பழி பூண்டுநின்ற அகலிகையைக் கோதமன் சபித்த செய்தியை “ நின்கைச் சுடுசரமனைய சொல்லால்’’ சபித்தானென்று கோசிகன் இராமனுக்குச் சொன்னபோது அவ்விராமனது சரத்தினும் சொல்லின் சுடுகையே முனிவன் மனதில் பதிந்திருத்தல் வேண்டும்.

வாலியின்மீது இராகவன் தொடுத்த வாளியைக் கம்பர், “ கதலியின் கனியினைக் கழியச்சேருஞ் சூசியிற் சென்றது, நின்றது ’’ என வருணித்திருப்பது அவன் சொற்களுக்கும் பொருந்தும். வனஞ்சென் றுறைந்து, “ஏழிரண்டாண்டின் வாவென்றியம்பினன் அரசன் ’’ என்று கைகேசி அரசனது உரையாக விதித்தானேனும் அதனுண்மையை ஊகித்த இராகவன், “மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ ’’ என்ற பணிவினிடையே, “ எந்தை யொருநாளும் இவ்வாறு விதித்திரான். இது நின் சூழ்ச்சியே யாதல் வேண்டும். பாதன் நாடாளவேண்டு மென்பது நின் கருத்தாயின் அதற்கு யான் மாறுபட்டு முரணமாட்டேன். உன்னுரை

யாகவே சொல். பழியைக் கொண்டுபோய்ப் பாவம் தயரதன்மீது சுமத்தவேண்டா" என்னுங் கருத்துப் புற்றரவென அடங்கியிருக்கக் காண்கின்றோம்.

பாரிபெர்க்கம் பலநல்கித் தன்னை மணந்தணையு மாறு வேண்டிய சூர்ப்பநகையை வரிசிலை வடித்த தோளான்,

திருதர்த மருளும் பெற்றேன்
நின்னலம் பெற்றேன் நின்னோ
டொருவருஞ் செல்வத்தி யாண்டும்
உறையவும் பெற்றேன் ஒன்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்னா

வாள் எயிறு இலங்கச் சிரித்த பரிகசச் சொற்களில் எதிர்மறை இலக்கணையாய்த் தோன்றும் இகழ்ச்சி வெளிப்படை. கறுத்துக் கறுத்து இடிப்பதனினும் சிரித்துச் சிரித்துச் செருகும் சொற்களே நிந்தனை பெரிதும் பெய்யும் சூழ்ச்சியாம்.

தாடகையைக் கொல்வித்த கோசிகனும், காடாளச் சொல்வித்த கைகேசியும் ஒருகால் இராமனது வசை நுணுக்கத்திற்குப் பாத்திராயினு மாவர். மற்றுக் கானும் மலையும் தன தண்ணனோடு கடப்பதே கடனாய் உடன் வந்து தொழும்பு பூண்டொழுகிய காதல்தம்பி இலக்குவனையும் வைவது நேரிதாமோ! சுக்கிரீவன் வாலியொடு பொருகின்ற திறத்தை, ஒளியம் பெய்ய மறைந்துநின்ற இராமன், தன் தம்பிக்குக் காட்டி வியந்த போது, உடன் பிறந்தோர்தம் அன்பின் உறுதியில் ஈடுபட்டிருந்த இலக்குவன் அக்காட்சியைக் கொடியதென வெறுத்துத் "தன் முன்னோன் வாழ்நாளை மாய்க்கக் கொடுங் கூற்றுவனை அழைத்துவந்த ஒரு குரங்கின் பழிப்பிற் கிடமாய போர் இதனைக் காண இசையாத துன்பம் எனதுள்ளத்தை உறுத்த உணர்வற்றிருக்கின்றேன். வீரனே, பகையென்று தன் தமையனையே கொல்லவந்த இச்சுக்கிரீவன் மற்றவர்களைத் தஞ்சமென்றடைந்தது என்ன பயனுடைத்து" என இச்செய்கையில் தனக் குடன்பாடின்றென மறுத்துக் கூறினான். தான் சிந்தையால் இசைந்து செய்யும் செய்கையை ஆராயு முரிமை எங்கிருந்து வந்ததிவ் விளைஞனுக்கென இராமன் மனம் சலிப்படைந்தது. வீர, என்று இலக்குவன் தன்னை யழைத்ததிற் சிறிது வஞ்சனை கரந்துளதோவென இராமன் அயிர்த்தான். தன் மனங் கோணுமாறு விஞ்சிய தம்பியின் வாயை அடக்குதற்கு எண்ணி,

அத்தாவி துகேளெனவாரியன்கூறுவானிப்
பித்தாயவிலங்கினொழுக்கினைப்பேசலாமோ
எத்தாயர்வயிற்றினும்பின்பிறந்தார்களெல்லாம்
ஒத்தாற்பரதன்பெரிதுத்தமனாதலுண்டோ.

[மேன்மகனாய இராமன், "சீரியோய், நினக்குப் பதிலுரைக்கின்றேன் கேள்—பித்துப்பிடித்த இம்மிருகங்களின் ஒழுக்கத்தை ஒரு பொருளாக நினைத்துப் பேசலாமோ! அதுவன்றி, எந்தத் தாய் வயிற்றிற் பிறந்தவர்களானாலும் தம்பிமார்கள் எல்லாம் தம் தமையன்பால் அன்போடு ஒத்துவாழ்ந்தால், பிறகு பரதனுக்கு என்ன பெருமையும் சிறப்பு மிருக்கின்றது]

என்று அருகிருந்த இலக்குமணனைப் புறக்கணித்துப் பரதனைப் பாராட்டியது சிறுபழிதீர்க்கவன்றி வேறன்று. இல்லையெனில், "எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்களெல்லாம் ஒத்தால்நீதான் பெரிதுத்தமனாதலுண்டோ" வென்று இராமன் வெகு இனிமையா யெடுத்துக்காட்டியிருக்கலாமே.

இனி, இராமனைச் சரண்புகுஞ் சிந்தையோடும் வீடணன் வாயில்வேண்டி நின்றபோது, மந்திரஞ் சூழ்ந்துரைத்த வானர வீரருள் சுடர்நெடு மணிமுடிச் சுக்ரீவன், "தன் தமையனைத் துறந்துவந்த இவன்செயல் தருமமுமன்று நீதியுமன்று முன்னவனைப் பகைவனுக்குக் காட்டிக்கொடுக்கும் இக்கொடியோனை யொருபோதும் நம்பலாகாது" என்று தன் சரிதத்தை அறவே மறந்து பேசியதைக் கருத்தில்வைத்த இவ்விராகவன் கடையில், "கதிரோன் மைந்த, கோதிலாதவனை நீயே என்வயின் கொணர்தி" எனப் பிரிநிலை ஏகாரத்தோடு அவனை அனுப்பியது குறிப்பிற் றகைந்த கூற்றாகும். "தன் முனைக் காட்டித்தருதல் தகவிலாக் கயமையாயின் அன்னான் வீடணன் ஒருவனே அல்லன். நீயுமுளாய், ஆதலின் நின்னினத்தைச் சென்று நீயே அழைத்துவா" என்னுங் கருத்தை யுட்கொண்ட சொற்களால் தன்விருப்பிற்கு மாறாகப் பேசிய சுக்கிரீவனை இராமன் தலை தட்டிய நயமும், அவன் சொல்லம்பின் ஆற்றலுக்கே சான்றாகும்.

வாழையுள் ஊசியை வைக்கு மாறுபோல், தாழ்மையாஞ் சொற்களால் வைதப தன்றியே, காழ்முதிர் தடியெனக் கடிந்த சொற்களும், கீழ்வரும் இடத்தினிற் கிடக்கக் காணலாம். ஐம்பிருதிங்கள் தனதுயிரனைய கொழுநனைப் பிரிந்து ஆற்றாத் துயர்க்கோர் அரும்பொருளாய் மாழ்கிப் பின் கொடுந்தொழில் இராவணன் மாய்ந்திடச் சிறைநீங்கிச் சிறந்தோங்கு மூவகையோடு வந்த, கற்பினுக் கரசினைப் பெண்மைக் காப்பினைப் பொற்பினுக்கு அழகினைப் புகழின் வாழ்க்கையைத் தன்பிரிந்து அருள்புரி தருமம் போலியை அமையநோக்கி, அக்கற்பின் வாழ்வனையவள், அணங்குறு நெடுங்கண் நீராறு வார்வுறும் மயிலென வணங்குங்காலையில், பச்சிலை வண்ணமும் பவளவாயுமாய்க் கைச்சிலையேந்தி நின்ற ஒரு வீரன், பணங்கிளர் அரவென எழுந்து,

குலத்தினிற் பிறந்திலை கோளில் கீடம்போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரப்பி னையரோ

எனச் சீறினனென்றால், அவன் விடுசரமோ வாய்ச்சொல்லோ வெம்மையுடைத்து ! இவையெலாங் கருதித்தானோ இராமனைப் பயந்த தாயும், "நிறைகுணத்தவன், நின்னிலும் நல்லன் குறைவிலன், பரதன்" என்று ஓரஞ் சாராது முன்னரே கூறினள்.

இவையனைத்தும் இவ்வயினெடுத்துத் தொடுத்தது இராமனுக்கோ ரிழுக்குப் பயக்குவிக்குமாறு புரிந்த பரிசன்று. அவன் நற்குணக்கடலில் ஆடுகின்ற கம்பர், நாடகக் காட்சி நிரம்பிய மனத்தரு மாதலால், தம் நூலின் முடிவிலே வைத்த நாட்டத்தை முதலிலிருந்தே இடையறாது செலுத்திக்கொண்டு போகின்ற கற்பனை மேன்மையைக் காணும்பொருட்டேயாம். சொல்லொக்கும் சுடுசரம் தாடகைக்கீந்த இராமன் கடையில் தன்கைச் சுடுசரமனைய சொல்லைச் சீதைக்கு மளிக்க நேர்ந்தது. இடையில் வந்தன கற்பனை பிறழாமல் பாத்திரத்திற்குரிய குணம் தொடர்ந்து வருவதைக் காட்டுவதற்காம். இதனால் இராமனே வன்சொலாளன் எனப் பிழைக்க வேண்டா. நன்முகமேபோல் தண்ணருளேபோல் மென்மொழியாலும் இரமிக்கச் செய்பவ னிராம னென்பதற்கையமில்லை. மைவண்ணத் தரக்கிபோரில் கைவண்ணங் காட்டியதேபோல் வேண்டுங்கால் வாய்வண்ணமுங் காட்டவல்லான் என்பதே இங்குக்குறிக்கப் பெற்றுளது.

அம்பு கிழித்தவழி ஆவியோடிய தாடகை அற்று வீழ்ந்த தன்மையைக் கம்பர் வருணிக்கின்ற பாசுரங்கள் நான்கும் எண்ணரிய திறமுடையன. அவைகளில்

பொன்னெடுங் குன்ற மன்னான்
புகர்முகப் பகழி யென்னும்
மன்னெடுங் கால வன்காற்
றடித்தலு மிடித்து வானில்
கன்னெடு மாரி பெய்யக்
கடையுகத் தெழுந்த மேகம்
மின்னொடு மசனி யோடும்
வீழ்வதே போல வீழ்ந்தாள்

[அழகிய பெரியமலையை ஒத்த இராமன் எய்தகபிலநிறமமைந்த பாணம் என்னும் அந்த வலிய ஊழிக்காற்று அடித்தவுடன், யுகக்கடையில் கல்மழை பொழிய ஆகாயத்தில் இடித்தெழுந்த மேகமானது மின்னலோடும் இடியோடும் விழுவதைப்போல் தாடகை கோரைப்பல் விளங்கக் கதறி விழுந்தாள்]

கான்றிரிந் தாழி யாகத்
தாடகை கடின மார்பத்
தூன்றிய பகழி வாயூ
டொழுகிய குருதி வெள்ளம்
ஆன்றவக் கான மெல்லா
மாயின தந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானம்
தொடக்கற்று வீழ்ந்த தொத்தே

[அப்பாலை வனமானது தன்தன்மை திரிந்து கடலாக மாறும்படி தாடகையின் கடின மார்பில் அழுந்திய அம்பின் வாயினின்று பாய்ந்த இரத்தவெள்ளத்தால், அகன்ற அக்கானம் எல்லாம், அந்திக்காலத்தில் தோன்றிய செவ்வானம் ஆதாரமற்றுத் தரையில் விழுந்ததை ஒத்ததாயிற்று]

என்னும் இவ்விரு செய்யுள்களும் தாடகை விழுந்த தோற்றத்தை வருணிக்கின்றன. இத்தோற்றத்தோடு கதையையுஞ் சார்த்தி

பொடியுடைக் கான மெங்கும்
குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த்
தாடகை தலைக டோறும்
முடியுடை யரக்கற் கந்நாள்
முந்தியுற் பாத மாகப்
படியிடை யற்று வீழ்ந்த
வெற்றியம் பதாகை யொத்தாள்.

[புழுதி நிறைந்த வனமெல்லாம் இரத்தம் பொங்க விழுந்த அந்த மின்னலைப்போன்ற பற்கள் செறிந்த பிலமனைய வாயுடைய தாடகை-தலைக்கொரு முடிதரித்த வைபவத்திலிருக்கும் அந்தப் பத்துத்தலை இராவணனுக்குத் துர்நிமித்தமாகத் தரையில் முன்னரே உடைந்து விழுந்த வெற்றிக்கொடியை ஒத்தாள்]

என்று கூறிய கம்பர் இவ்வாறே பின்னரும் சூர்ப்பணகையின் முலைதுமித்து உயர் மூக்கினை நீக்கிய முறைமையை

மலைதுமித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை

என்றுங் காட்டுவார். அரக்கரை வேருட னறுப்பதற்கு அவதரித்த எம்பெருமானது சரிதத்தில் இத்தாடகை வதம் முதற்செய்கையேயன்றி முக்கியமான வோர் சம்பவமும் ஆகும். எவ்வாறெனில்,

வாசநாண் மலரோ னன்ன
மாமுனி பணிம றுக
காசுலாங் கனகப் பைப்பூண்
காகுத்தன் கன்னிப் போரில்
கூசிவா ளரக்கர் தங்கள்
குலத்துயிர் குடிக்க வஞ்சி
ஆசையா லுழலுங் கூற்றும்
சுவைசிறி தறிந்த தன்றே.

[வாசனை பொருந்திய புதிய தாமரைமலரை ஆதனமாக உடைய நான்முகனுக்கு நிகரான விச்வாமித்திரன் இட்ட கட்டளையை மறுக்காமல், இரத்தினங்கள் பதித்த பசும்பொன் ஆபரணங்களை அணிந்த இராமன் செய்த இந்தக் கன்னிப்போரில், வாள்களுடைய அரக்கர்களது குலத்தின் உயிரைக்குடிக்க ஆசை இருந்தும் அவர்பால் அணுகுதற்கு அச்சத்தால் கூசிக் கூசி உழன்றிருந்த எமன் இன்று அவர் உயிர்ச்சுவை சிறிது அறிந்து விட்டான்.]

ஆதலால் இனி அரக்கரை அவன் விடமாட்டான். மானுட இரத்தத்தை ஒருதரம் சுவைத்துவிட்ட புலி அச்சந்தீர்ந்து அப்புறம் வேறெதனையும் நாடாமல் மனித இறைச்சிக்கே புகுந்தலையும். கோளரக்கரெல்லாம் இனிக் கூற்றுவனுக்குக் குறியாயினர்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[764-ம் பக்கத் தொடர்ச்சி]

பலரும் பல்வகை யாதல்.

தேவராட்டி

திருமறையில் வருமுறையே இறைவனை இறைஞ்சிய சிவகோசரியாரைச் சென்று கண்டோம். பழைய பழக்க வழக்கப்படி பழங்குடித் தெய்வங்களுக்குப் பலி முதலியன கொடுத்து வழிபடுவதனாலே அத்தெய்வங்கள் தன்மேல் ஆவியாய்வந்து தன் வாயால் பேசும்பொழுது தன்னை மறந்து குறிசொல்லி வந்த பழம்பாட்டியாகிய தேவராட்டியும் வந்தாள். அவள்மேல் ஆவேசம் வருவதைக் குறித்துச் சேக்கிழார் அவளுக்குக் கடவுட் பொறையாட்டி எனப் பெயரிடுகின்றார். உள்ளக்கிளர்ச்சி பெரிதும் உடையராய்த் தம்மை மறந்து தெய்வம் ஆடுவார் ஆண்களில் விடப் பெண்களில்தான் மிகுதி. அந்தச் சிறப்புப் பற்றிச் சேக்கிழார் குறியாடும் பெண்ணைப்பற்றியே கூறுகின்றார். இத்தகைய குறியாடு நிலையங்களில் பெரிதும் பழக்க வழக்கமே திருமறையாதலினால் பழம்பாட்டியே குறியாடுதவற்குப் பெரிதும் தகுதி உடையாள். சேக்கிழார் புகழும் தேவராட்டியின் நடையும் உடையும் அச்சத்தைத் தரத்தக்கன. தளிர் மாலை சூடி இருந்தாள். கலைமான் கொம்பை அரிந்து குழையாகச் செய்து காதில் அணிந்து வாழ்ந்தாள். கஸ்தூரிப் பொட்டினை நெற்றியில் நன்கு விளங்க இடுவது வழக்கம் மயிலின் கழுத்தைச் சிறுசிறு வட்டமாக அறுத்துச் சங்கு

மணியுடன் கோத்து மாலையாக அணிந்து நின்றாள். உடுத்திய உடையோ மரவுரி. அந்த மரவுரியின் மேலே மயிற் பீலி சுற்றியிருக்கும். அவளோ நரை மூதாட்டி.

> கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக்
> கலைமருப்பின் அரிந்தகுழை காதிற் பெய்து
> மானின்வயிற் றரிதாரத் திலக மிட்டு
> மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு
> தானிழிந்து திரங்கிமுலை சரிந்து தாழத்
> தழைப்பீலி மாவரிமேற் சார வெய்திப்
> பூநெருங்கு தோரைமலி சேடை நல்கிப்
> போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள்.

அவளது தொழிலோ குறி பார்த்துச் சொல்லுவது. கண்ணப்பரைக் கன்னி வேட்டைக்கு அனுப்பிவைப்பதற்காகக் காட்டில் உள்ள கடவுளர்களுக்குப் பலியூட்ட வேண்டினான் நாகன். அதற்காகத் தேவராட்டியை வரவழைத்தான். அப்பொழுதிருந்த குறிகள் மிக நல்லன என்றாள்.

> மற்றவன்றன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி
> மனமகிழ்ந்திங் கன்போடு வருகின் றேனுக்
> கெற்றையினும் குறிகண்மிக நல்ல வான
> இதனாலே உன்மைந்தன் திண்ண னான
> வெற்றிவரிச் சிலையோனின் னளவில் அன்றி
> மேம்படுகின் றானென்று விரும்பி வாழ்த்திக்
> கொற்றவனத் தெய்வங்கள் மகிழ வூட்ட
> வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள்.

பின்னும் அவளது நடையோ எல்லோரையும் அவளுக்கு அடிமையாக்கியது. கடவுளர்கள் தன்மேல் ஆவியாய் வந்தமர்ந்ததும் தன்னை மறந்து தெய்வமாடிக் குறி சொல்லி வந்தாள். கண்ணப்பர் வேட்டைக்குப் போய்க் கொண்டிருந்தார். அப்போது இந்தக் கடவுட் பொறையாட்டி காட்டுக்குப் பலி கொடுத்துவிட்டு மிடுக்காக விரைந்து பெருநடையாக நடந்து வந்தாள்.

திண்ணனாரைச் சூழ்ந்திருந்த வேடர்கள் அந்த நடைக்குத் திடுக்கிட்டு அஞ்சி வழிவிட்டு ஒருபுறம் ஒதுங்கி நின்றனர். இவள் அவ்வாறு அவ்வேடர்களை நீக்கி வழி செய்துகொண்டுபரபரவென்றுஉள்புகுந்துபோய்த் திண்ணனாருக்கு நன்மை பெருகுவதற்காக அவன்நெற்றியின் மீது பூவும் அரிசியும் கலந்து தெறித்து வாழ்த்தினாள். "உனது குலத்திலேயே உன்னைப்போல் பெருமைபெறப் போகின்றவர்கள் இல்லை" என்று குறிசொன்னாள். அவரது பெருமை அளந்தறிய முடியாதென்று புகழ்ந்தாள்.

அவ்வேடர்களது பெருங்குடியில் நலத்திற்கும் பொலத்திற்கும் இக்கிழவியை அழையாமல் முடியாது. பிள்ளை இல்லையென்றால் இவள்தான் வந்து பேரணங் காடல் செய்யவேண்டும். கன்னி வேட்டைக்குப் போவதென்றால் காடுபலி மகிழ்வூட்ட இவள் வரவேண்டும். கண்ணப்பர் தம்மையுமறந்து காளத்தியப்பரிடத்தே காதல்கொண்டு அதேபித்தாய் இருந்து அரசையும் அனைவரையும் மறந்தமையை வந்து நாகனிடம் நாணனும் காடனும் தெரிவித்தார்கள். அந்தப் பித்தைப் போக்கவும் இக்கிழவிதான் போகவேண்டும்.

இவள் இயற்றும் வழிபாடுதான் என்ன? தேன் தசை, கள், பொரி, உணவு முதலியவற்றைப் படையல்போட்டுக் கடவுளர்க்குப் பலியூட்டுவதுதான். கடவுள் தன்மேல் வந்ததும் ஆடிஆடிக் குறி சொல்வாள். கடவுள்குற்றம் வருமானால் அந்தக் கடவுளுக்குப் பலியூட்டி மகிழ்வித்து அந்தக் குறையை நீக்கிவிடுவாள். அதனால் அல்லவா நாகன் இவளுக்கு வேண்டியவற்றை எல்லாம் என்றும் பெற்று வாழும்படியாக ஏற்பாடுகள் செய்துவைத்தான்.

> நின்றமுது குறக்கோலப் படிவத் தாளை
> நேர்நோக்கி அன்னைநீ நிரப்பு நீங்கி
> நன்றினிதி னிருந்தனையோ என்று கூறும்
> நாகனெதிர் நலம்பெருக வாழ்த்தி நல்ல
> மென்றசையும் ஈயலொடு நறவும் வெற்பில்
> விளைவளனும் பிறவளனும் வேண்டிற் றெல்லாம்
> அன்றுநீ வைத்தபடி பெற்று வாழ்வேன்
> அழைத்தபணி என்னென்றாள் அணங்கு சார்ந்தாள்

அன்று நீ வைத்தபடி என்றதற்கு "முன் உனக்குப் பிள்ளை உண்டாக நான் பேரணங்காடல் ஆடியக் கடவுளை வேண்டி அவரது திருவருளை வாங்கித் தந்தேனே, அன்று முதலாக" என்று கொள்ளலாம். அல்லது "முதல் நாளில் எவ்வளவு அச்சத்தோடும் அன்போடும் வேண்டியவற்றைக் கொடுத்து வழிபட்டாயோ அது போலவே ஒரு மாறுதலும் இன்றிக் கடைசிவரையும் குறையொன்றும் இல்லாமல் வைத்திருக்கின்றாய்" என்று கூறியதாகவும் கொள்ளலாம். எவ்வாறு கொண்டாலும் இதிலிருந்தும் இவளை வேடர்கள் எவ்வளவு உயர்வாகக் கொண்டாடி வந்தார்கள் என்பது தெளிவாகின்றது. முற்றமுடிய இக்கிழ மூதாட்டிக்கு வெற்றிதான். பேரணங் காடல்செய்தாள்; பிள்ளை பிறந்தது. காடுபலி மகிழ வூட்டினாள்; கன்னிவேட்டையில் கண்ணப்பர் தலை சிறந்தவராயினார். ஏதோ பெரியதோர் பேற்றினைக் கண்ணப்பர் அடையப்போகின்றார் என்று கூறியதால் என்றும் நடந்திராததோர் நிகழ்ச்சியை நாம் எதிர் பார்க்கும்படி செய்துவிட்டாள் அது என்னவோ என்று அறிய நமது மனம் அல்லாடத் தொடங்கியது. திண்ணனாருக்கு இணையானவர்கள் அவரது குடியில் முன்னும் இல்லை பின்னும் இல்லை என்று குறி சொன்னதும் உண்மையாயிற்று. ஆனால் கண்ணப்ப ரெதிரே வந்தபோதுதான் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கடைசியில் கண்ணப்பரது பித்தினைத் தெளிய வைக்க முடியாமற் போய்விட்டது.

> நாணனொடு காடனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
> ஊணுமுறக் கமுமின்றி அணங்குறைவா ளையுங்கொண்டு
> பேணுமக னார்தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
> காணுநெறி தங்கள்குறி வாராமற் கைவிட்டார்.

கைவிட்டுப் போனார்கள் என்று கூறுவதோடு நில்லாது,

> முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கின்
> இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத்
> தன்பரிசும் வினைஇரண்டும் சாருமல மூன்றுமற
> அன்புபிழம் பாய்த்திரிவார் அவர்கருத்தின் அளவினரோ

என்றும் தமது கொள்கையைத் தெரிவிக்கின்றார் சேக்கிழார்.

ஆண்டவனைப் பலர் பலவகையாலும் தொழுது வழிபடுகின்றனர். குற்றம் பார்ப்பதே கடவுளது தொழில் என்று எண்ணி அவரது சினத்திற்கஞ்சி எப்போதும் வழிபடுவார் சிலர். நன்மை செய்யாமற் போனால் போகட்டும்; தீமை செய்யாதிருந்தால் போதும் என எந்நாளும் வேண்டிக் கொள்வர். அவர்கள் வழிபாடும் அச்சத்தை விளைவிப்பனவாகும். ஆடுவெட்டல் மாடுவெட்டல் கோழிவெட்டல் குறியாடல் முதலியன அவர்கள் செய்யும் வழிபாடாகும். அது அச்சநிலை. இன்னுஞ்சிலர் எல்லாம் வல்லவர் கடவுள் என்று

அறிந்து, இது வேண்டும் அது வேண்டுமென்று வழிபடுகின்றனர். நூற்றுக் கணக்காக ஊதியம் வந்தால் ஒரு தேங்காய் உடைப்பதாகச் சொல்லிக் கொள்வார்கள். இரண்டொன்று கொடுத்துவிட்டு இறைவனை ஏமாற்ற எண்ணுகின்றனர். களவு செய்ததில் கையும் பிடியுமாகப் பிடிக்கப்பட்டால் தப்பித்துக்கொள்ளக் கடவுளை வேண்டுவர். கடவுளை வழிபடுவது கைந்நட்புச் சேவகமாய் முடிகின்றது. தம்மைப்போலக் கடவுளையும் எண்ணி விடுகின்றனர். இவர்கள் வழிபாடு இதற்குத் தக்கபடி ஒரு சிறிது அறிவாளிகளின் செயல்போல இருக்கும். இஃது அவா நிலை.

> அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
> அவாவுண்டேல் உண்டாம் சிறிது.

கடவுள் வழிபாடும் ஒரு பெருந் திருவுளமாதலின் (ஆசாரமாதலின்) இக்குறள் இதைப்பற்றியும் கூறுகின்றதெனலாம். ஆகவே இத்தகைய வழிபாடுகள் உயர்ந்தன அல்ல. இழிந்தோரது வழிபாடாம். ஆனால் கடவுளையே நினையா திருப்பவர்களைவிட இவர்கள் உயர்ந்தவர்கள் எனலாம்

> அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும்
> நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ

என்கின்றார் திருநாவுக்கரையர். இருந்தாலும் அன்பினால் வழிபடுவதே சிறந்ததென்பது யாவரும் உடன்பட்டது. அவ்வாறு வழிபட்டவர் கண்ணப்பர் ஒருவரே. அறிவால் அறிந்து வழிபட்ட சிவகோசரியாரது அறிவு நிலையைச் சேக்கிழார் முன்னர்க் கூறுகின்றார். அச்சத்தாலும் அவாவினாலும் வழிபட்ட கடவுட் பொறையாட்டியின் நிலையினைக் கூறிக் கண்ணப்பரது அன்பு நிலை அந்த அச்ச நிலைக்கும் அவா நிலைக்கும் அப்பாலுக்கு மப்பாலாய் உள்ள தென்பதைக் காட்டவே தேவராட்டியைக் கொண்டு வருகிறார். அவளது நிலையை இழித்துரைக்கின்றார்.

> "அன்பு பிழம்பாய்த் திரிவார்
> அவர்கருத்தி னளவினரோ"

என்கின்றார். அச்ச நிலை, அவா நிலை, அறிவு நிலை, என்பவற்றைவிட, அன்பு நிலையே சிறந்ததெனும் கொள்கையை வற்புறுத்துகின்றார். அதனை வற்புறுத்தத்தான் அக்கடவுட் பொறையாட்டியை முன், குறி சொன்னதோடு ஊரில் விட்டுவிடாது, அவளைக் காளத்தியப்பர் எதிரிலும் இழுத்துவந்து வைத்து நிலைவேறுபாட்டினை நேரேகாட்டி விளக்குகின்றார். கண்ணப்பர் அன்புநிலையில் தலைசிறந்து விளங்குவதுபோல அச்சநிலையிலும் அவாநிலையிலும் தலைசிறந்து விளங்கிய மூதாட்டியாகிய தேவராட்டியையே கொண்டுவந்து நிறுத்துகின்றார். வேலன் முதலியோரொடு கண்ணப்பரை ஒக்கவைத்து நோக்கி வேற்றுமை கூறுவதில் கண்ணப்பருக்குப் பெருமை இல்லையன்றோ? பெரியதோர் மலையினை அணுவினும் பெரிதெனப் புகழ்வதால் மலைக்கு இழிவேயன்றி உயர்வு ஏதேனும் உண்டோ! அங்ஙனமே இங்கும் என்க. தேவராட்டி வேலனைப்போலக் குறியாடுவதே தொழிலாகஇருந்த குடியிற் பிறந்தவள் அல்ல. தனது உயர்வாலும், கடவுளரது அருளாலும் பெருமை பெற்றவள். காலமெல்லாம் அவ்வகையில் கழித்துப் பழக்கவழக்கங்களை நன்கறிந்து நின்றதால் எல்லோராலும் போற்றப்பட்டவள். அவளோடு கண்ணப்பரை ஒக்கவைத்துநோக்கி வேற்றுமை காட்டுகின்றார் சேக்கிழார். அச்சநிலையிலே நின்று வழிபடுவார் விலங்குகளை வெட்டி இறைச்சியைக் கொண்டுவந்து படைப்பதுபோலக் கண்ணப்பரும் இறைச்சியையும் தேனையுந்தான் கொண்டுவருகின்றார். ஆனால் அவர்கள் படைக்கின்றார்கள். இவர் ஊட்டுகின்றார். கண்ணப்பரும் அவர்களைப்போலத் தோலும் மயிற்பீலியும் அணிந்துள்ளார். சங்குமணியும் பலகறையும் பூண்டுள்ளார். அவர்களுக்கு உடையிலும் நடையிலும் நகையிலும் பகையிலுமே நாட்டம். இவரோ அவற்றை எல்லாம் மறந்தார். முன்னர் அணிந்திருந்தவை அணிந்தபடி இருந்தனவேயன்றி வழிபாட்டிற்காக இவற்றைப் பூண்டவர் அல்லர். ஆகவே மேனோக்காகப் பார்க்கும்போது வடிவாலும் உடையாலும், தொழிலாலும் தேவராட்டியைப் போலக் கண்ணப்பர் தோன்றினாலும், உள்ள நிலையில் என்ன வேறுபாடு! அது முழுதும் கடைசியில் கண்ணப்பரது பித்தைத் தெளிவிக்க வந்த நிலையில் நன்கு புலனாகின்றது. இவர் உலகை மறந்து கடவுள் எதிரே நிற்கின்றார். தேவராட்டி என்ன என்னமோ தெய்வமாடியும் ஒன்றுஞ் செய்ய இயலாது கைகழுவிவிட்டுத் தலைமூழ்கிப் போகின்றாள்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

அரிஸ்தோத்லன்.

(ARISTOTLE)

(777-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு சாஸ்திரங்களின் பிறப்பிடமும் முடிவிடமுமாவது மூலதத்வம் (First Philosophy). ஒவ்வொரு சாஸ்திரமும், அவ்வது எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பிரபஞ்சாதிகளின் பகுதியை ஆராத்தீர ஆலோசித்து, அவற்றின் போக்கையும், இணக்கத்தையும், பயனையுமே உணர்த்துவதாகும். கணிதமும், பல பகுப்புக்களடங்கிய பிரகிருதி சாஸ்திரங்களும், தாவர ஜங்கமப் பிராணிகளின் தொகை - தோற்றம் - பருமன் - குணம் - வளர்ந்து வியாபிக்கும்விதம் ஆகியவைகளை, ஒவ்வொன்றும் ஒவ்வோர் வழியில், அறிவுறுத்துவன. இவைகளுக்கெல்லாம் அடிப்படையான, அவைகளை இயக்கி-இணைப்பிப்பதான, யாவற்றுள்ளும் ஊடுருவிப் பாய்ந்து பரிணமித்து நிற்பதான, ஆதி வஸ்துவைத் தெளிவிப்பதே முதற்றத்துவம் என்பது. உயிர்நூல் உயிர்களைப் பற்றியும், உளநூல் உள்ளத்தைப் பற்றியும், பூசாஸ்திரம் பூமியைப் பற்றியும் விஸ்தரிப்பதுபோல், அம்மூலதத்வம் அகில புவனங்களனைத்திற்குங் காரணமான முதற்பொருளைப் பற்றிச் சித்தாந்தப் படுத்துகின்றது. தநுகரண புவன போகங்களெல்லாவற்றையும் தோற்றுவித்து, இயக்கி, ஒடுக்குவிக்கும் மூலவஸ்து, அல்லது கடவுள், அல்லது பரம்பொருளைப்பற்றிக் கூறும் மூலதத்வம் ஏனைய சாஸ்திரங்களை, அல்லது அறிவுகளை, தன்னுள்ளடக்கி நிற்கின்றதென்பது தெளிவாகின்றது. இம்மூல தத்துவத்தை ஆராய்ந்து அறிந்து நிச்சயித்தற்கான சக்தி வாய்ந்தவன் மனிதனே. கடவுட்டன்மையைத் தன்னிடம் பொருந்தப் பெற்றிருத்தலே இதற்குக் காரணம். காட்சிப் பொருள்களைப் புத்தியின்மூலமாக உள்ளபடி அறிகின்றான்; பாஷை வாயிலாகப் பிரித்துச் சேர்த்துப் பெய

ரிட்டு வருகிறான். பாஷைகளும் இலக்கணங்களும் சில பொதுவிதிகளுக் குட்பட்டு முறைபிறழாது பெருகுவனபோல், இவ்வுலகாதிகளும் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டுள. அவைகளே பதார்த்தங்கள் (Categories) எனப்படுவன. அவை பின்வருமாறு:—

முதற்பொருள், அளவு, குணம், சம்பந்தம், இடம், காலம், நிலை, தோன்றும் விதம், இயக்கம், அசலனம். அதாவது, கருப்பொருள் உரிப்பொருள்களெல்லாம் அப்பதார்த்தங்களின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பன; அல்லது, முதற்பொருள் அப் பத்துப் பதார்த்தங்கள் வழியாகப் பரிணமிக்கின்றது. இப்பதார்த்தங்களைக் கழித்து, அவைகளுக்கு அதீதமாக நிற்கும் பரம்பொருளைப்பற்றி விரிப்பதே மூலதத்வம்.

ஜடம், வெறும்பொருள் - அசேதனத்தையும் (Matter), ஜீவன், குணம் - உருவம் சேதனத்தையும் (Form) உடைத்தாய் நிற்பன இவ்வுலகாதிகள். முன்னது பின்னதிற்கு அஸ்திபாரமாகவும், பின்னது முன்னதின் இலக்ஷியமாகவும் உள்ளது. பொருளை உருவத்தினால் அறிகிறோம்; உருவம் பொருளாலாயது, அல்லது பொருள் தாங்கப் பெற்றுளது. ஜடப்பொருள்களைக்கொண்டு ஜீவன் இயங்குகின்றது. நீளம் - அகலம் - ஆழம் - உயர்ச்சி என்பவைகளைப் பெற்றிருக்காத பொருளேது? பின்னதில்லை யாமானால், முன்னவைகளின் கருத்து என்னை? அல்லது, அவைகளைப் பற்றிய உணர்ச்சியும் அறிவும் எவ்வாறு உண்டாகும்? சுருக்கத்தில், அவைகள் ஒன்றற்கொன்று, பிரிக்கக் கூடாதவண்ணம், இணங்கி நிற்கின்றன போலும்; சத், அல்லது உருவமும் அசத் அல்லது ஜடமும் தொடர்பற்றுத் தோன்றுவனவல்ல, தோன்றக் கூடியனவுமல்ல. சத்-குணம்-உருவம் என்பது மிக்க மேலாக விளங்குவதானாலும், அதன் தோற்றத்திற்கும் தொழிலுக்கும் ஜடப்பொருள் இன்றியமையாத துணைப் பொருளென்பதை மறக்கக் கூடாது.

இப்பொருளையும் உருவத்தையும், சக்தியொடுக்கம் (Potentiality) எனவும், சக்திவிரிவு (Actuality) எனவுங் கொள்ளலாம். இதை விளக்குவோம்:—இருவித ஜீவப்பிராணிகளின் கருக்களை (Embryo), அல்லது இருவித செடிகளின் விதைகளைக் கவனித்துப் பார்ப்போம். எத்தகைய பிரகிருதிசாஸ்திர நிபுணனும், எவ்வளவு ஆராய்ச்சி செய்யினும், அவைகள் இன்னின்ன இனத்தைச் சேர்ந்தன வென்பதைப் பற்றித் தெளிதற்கியலாது. எனினும், அவைகள் வெவ்வேறினத்தைச் சேர்ந்தன; அவ்வினத்தை யநுசரித்தே வளர்ந்து மேலெழுகின்றன. ஆலம்வித்தினின்று வேப்பமரம்வளர்வதில்லை. மர்க்கடக் கருவினின்று மனிதனும், மானுடக் கருவினின்று முயலும் தோன்றுவதில்லை. பார்த்தற்கியலாவிடினும், உண்மையில், அவ்வவ்வினப் பெருக்கம், அல்லது வளர்ச்சிக்கான சக்தியை யுடைத்தாய், அச்சக்தியினால் உந்தப்பட்டு, ஜாதிமுறை பிறழாமல், இனத்தன்மை மாறாமல், ஜீவவர்க்கங்கள் உயர்கின்றன என்ற உண்மையை அறியாதவரிலர். இவ்வாறு, காலக்கிரமத்தில், ஒவ்வொன்றும் அவ்வதின் உட்சக்தியின் இயக்கம்-அமைப்பு-தன்மைகளுக் கேற்றவாறு மேன்மேலோங்கி வளர்ந்து, ஒடுங்கிக்கிடந்த குணாதிசயங்களை விரித்து வெளிப்படுத்துகின்றது போலும். ஆலம்வித்துப் பெரிய ஆலவிருக்ஷமாகவும், மானுடக்குழவி பெரிய திடகாத்திரனாகவும், தங்கம் நல்லாபரணமாகவும், அறிஞன் கலைஞானியாகவும் பரிணமிப்பதைப் பார்த்து வருகிறோம்.

பல்வேறு தோற்றங்களுக்கும், பலதிறப்பட்ட குணங்களுக்கும் இணக்கத்திற்கும் காரண மென்னை? இயற்கையுலகி லாகட்டும், செயற்கை யுலகி லாகட்டும், ஒரு பொருளின் ஆக்கத்தில் காரணங்கள் பிரசன்னமாயிருக்கின்றன. உதாரணமாக, செயற்கை உலகைக் கவனிப்போம். படுக்கை அல்லது சிலா விக்கிரஹமொன்றைச் செய்ய விரும்பினால், (1) மரமோ சலவைக் கல்லோ, அல்லது பித்தளையோ, ஏதோ ஒரு பொருள் வேண்டும் (Material Cause); (2) மேல்வரிச் சட்டம் (Pattern) அல்லது உருவம் வேண்டும் (FormalCause); (3) கை விரல்கள் போன்ற உறுப்புக்களும், ஆயுதங்களும் வேண்டும் (Efficient Cause) (4) பயனை உத்தேசித் திருக்கவேண்டும் (End or final cause). இன்னும், இயற்கையுலகைப் பார்ப்போம்: மானுடன் உண்டாவதற்கு (1) கருப்பொருள் (2) ஜாதிப் பண்பின்படிக்குக் கருத் தரித்து ஒழுங்குடன் வளர்தல் (3) இரு பாலரின் புணர்ச்சி (4) இனப்பெருக்கம் - சிறப்பு என்பன காணப்படுகின்றன. சுருக்கத்தில், (1) பொருள் (2) சிந்திப்பு (3) கருவி (4) இறுதிப் பயன், அல்லது இலக்ஷியம் என்பனவற்றால் ஒவ்வொன்றும் ஆக்கப்பட்டு வருவது. இவ்வாறு நாலு காரணங்களாக வகுத்தோ மாயினும், உண்மையில், சிந்தனை-கருவி-பயன்களாகிய மூன்றும் ஒன்றுபட்டு நிற்பன போலும். புத்தர் சிலையொன்று நிரூபிக்க வேண்டுமென்ற உணர்ச்சி அல்லது எண்ணம் சிற்பாசாரியன் மனத்துள் உதிக்கவே, வேண்டிய பொருள்களைத் தக்கபடி சேகரித்து, முறைப்படி கருதிய சிலையைச் செய்து முடிக்கின்றான். இதனில், எண்ணம்-கருத்து-நோக்கம் என்பது, பலன் அல்லது முடிக்கப்பட்ட வேலையின் மூலமாக வெளியாகி விட்டதல்லவோ? அதாவது, எண்ணம் அல்லது கருத்தே சிலையுருவமாக மாறிவிட்டதுபோலும். சூக்ஷ்ம ரூபத்துடன் சிற்பியின் மனத்துள் பதுங்கிக் கிடந்தது, வேலைத் திறத்தால் யாவரும் பார்த்தறியக் கூடிய உருவந் தாங்கி வெளிப்பட்டது போலும். இனி விஞ்சி நிற்பது ஜடப் பொருளாகும். எனினும், ஊன்றிப் பார்ப்போமாயின், ஜடம் அல்லது அசித் என்பதும், சித் அல்லது உருவத்துள் அடங்கி, அல்லது உருவமாக மாறுதலுற்றுக் கிடப்பதை அறிவோம். ஒழுங்குடன் செய்யப்பட்ட மரக்கட்டைகள் மேஜை முதலான சாமான்களாகவும், உருவற்றுச் சிதறிக்கிடந்த உலோகங்கள் எழில்மிக்க சிலைகளாகவும் மாறுகின்றன. திருந்திப் பண்படுத்தப்பட்ட - துலக்கப்பட்ட ஜடப்பொருளே பின் மாறுதலுற்று உருவத்துடன் திகழ்வது போலும். மெய்யாக, இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமை, அல்லது பிணக்கம் என்பது இல்லை; பெண் ஆணையும், ஆண் பெண்ணையும் நாடிச் சென்று ஒட்டி யொழுகுதல்போல், அவ்விரண்டும் ஒன்றையொன்று தேடிப் பற்றி ஒன்றுபட்டு விளங்குவன.

இயக்கம் என்பது அவ்விரண்டையுஞ் சேர்த்துத் தொழில்புரியச் செய்கின்றது. இதனின் அநுகூலத்தினாற்றான் முன்னது பின்னதுடன் கலந்து உயர்வடைகின்றது. இவ்வியக்க சக்தி ஜடப்பொருளிலேயே பதுங்கிக் கிடப்பதுபோலும். சத்தினுள் உருவங்களைப்பற்றிய எண்ணம் எழவே, ஜடப் பொருளுக்குள்ள இயக்கசக்தி இயங்கிப் பரிணமித்துச் சத் எண்ணிய உருவத்தைத் தோற்றுவிக்கின்றது. சத் ஒருபொழுதும் அசைவதில்லையென்பதைக் கவனிக்கவேண்டும். எதுபோலெனின், நம் மனத்துள் ஏதாவதொரு எண்ணம் உதிக்கவே, மனமானது தான் அசையாது, பிறவுறுப்புக்களை அசைவித்துத் தன்கருத்தை நிறைவேற்றிக் கொள்வதுபோலாம். ஜனனம், இழிவு - அழிவு, மாற்றம் (குணம் வேறுபடல்), பெருக்கம் - சிறுக்கம் (பருமன், அல்லது அளவு மாறு

தல்), இடைவெளியி லோட்டம் என்பன, இவ்வியக்க சக்தியின் பாகுபாடுகளாம். இயக்க சக்தி நித்தியமானது.

பரம்பொருளென்பது சிறிதேனும் ஜடப்பொருள் தாங்கப்பெறாத கேவல உருவத்துடன் மாத்திரம் விளங்குவது. ஜடப்பொருளைப் பெற்றிராத உருவமில்லை என்ற இவருடைய விதிக்கு அச்சாதனை முரணாக நிற்கின்றதெனச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அல்ல; உருவம் பெற்றிராத அல்லது குணமற்ற பொருள் என ஜடத்திற்கு இவர் இலக்கணம் கூறியிருக்கிறார். முதல் பண்பற்றுச் சீர் குலைந்து கிடந்த ஜடப்பொருள் நல்லுருவுற்றுக் குணமுடைத்தாய் உயர்ந்தவுடன், ஜடப் பொருளின் சுவபாவம் மாறியவுடன், ஜடப்பொருள் இல்லாது போய்விட வில்லையே? ஜடப்பொருளின் துல்லிய உருவமே பரம்பொருளாம். இப்பரம்பொருள் நித்தியமானது, சலன மற்றிருப்பது. எனின், சலனம், அல்லது இயக்கசக்தியின் ஆதாரமென்னை? மிக்க அழகிய சித்திர மொன்றை நாம் பார்க்கும்பொழுது, நம்முள் பற்பல மாறுதல்க ளேற்பட்டு உள்ளங் கிளர்ந்து நெகிழ்கின்றது; உரைத்தற் கியலாத இன்பமும் சாந்தியுமடைகிறோம்: ஆனால், அச்சித்திரம் அசைவதில்லை. நம்முடைய ஆடல் - பாடல் - உணர்ச்சிகளுக்குத் தக்கவாறு மாறுகிறதில்லை. இன்னும், நாம் விரும்பி இயற்றுங் கர்மம், அல்லது நம்முடைய அந்தரங்க இலக்ஷியம் தான் அசையாது, எவ்வாறு நம்மை இயக்கி ஆட்டுவிக்கின்றதோ, அவ்வாறே பரம்பொருளும், தான் அசையாது, பிறவற்றை ஆட்டுவிக்கின்றது போலும். இப் பரம்பொருளுடன் லயிக்க வேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டு யாவும் இயங்குகின்றன. எனினும், இவ்விருப்பத்திற்கு முதற்காரணம் அப்பரம்பொருளேயாம்.

பரம்பொருள் சுத்த சித்தாயிருப்பது. உலகாதிகளின் சாரத்தை-மெய்யியல்பை - நுண்ணறிவால் உடனுக்குடனே உய்த்துணர்தற்கான சக்தி பொருந்தியதாம். ஆதியாய் அந்தமாயுள்ள அப்பரம்பொருள் எல்லாவற்றுள்ளும் (Immanent), அப்பாலும் (Transcendent) விரவி நிற்பதாம். போர் ஒழுக்கங்கள் எவ்வாறு சைன்னியங்களிலும், அப்பால் தலைவனுள்ளும் விளங்குகின்றனவோ, அவ்வாறே நேர்மை - நீதி - எழில் முதலானவைகளெல்லாம் தோற்றப் பொருள்களில் பரிணமித்தும் இறைவன் உள்ளத்தில் ஒடுங்கியும் இருக்கின்றன. சீர் - முறை - இணக்கம் - ஒற்றுமையுடன் இவ்வுலகாதிகளொவ்வொன்றும் காணப்படுவதினின்று பரம்பொருளின் ஏகத்வத்தை நாம் ஊகித் துணர்கிறோம்.

(தொடரும்) T. R. இராஜகோபால்.

சூர்ப்பநகை.

(768-வது பக்கத் தொடர்ச்சி)

கம்பநாடர் இதுகாறும் தமது நாடகத்தில் இராமனையும் சூர்ப்பநகையையும் தனியாகச் சந்திக்கச் செய்து, சூர்ப்பநகையின் காதலையும் இராமனது நினைப்பையும் மறுமொழியையும் படிப்படியாக உயர்த்திக்கூறி, நகைச்சுவையும் சிருங்காரச் சுவையும் பொருந்தித் ததும்பி நிற்குமாறு சித்திரித்து, முடிவில் இராமன் சிரித்ததாகக் கொண்டு முடித்து, இதற்கு நடுவில்

"பெண்ணிடை யரசி தேவர்
பெற்றநல் வரத்தாற் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த
வஞ்சியே போல்வாள் வந்தாள்."

என்று இராம சூர்ப்பநகையாகிய இருவர்க்கு நடுவில் சீதையையும் வரவழைத்திருக்கின்றார். வந்த சீதாபிராட்டியை,

"மீன்சுடர் விண்ணும் மண்ணும்
விரிந்தபோ ரரக்க ரென்னும்
கான்சுட முளைத்த கற்பின்
கனலியைக் கண்ணிற் கண்டான்"

என்று அடை கொடுத்துக்கூறிச் சூர்ப்பநகையும் அவளைக் கண்டாளென் றமைத்திருக்கின்றார். இம்மூவருள்ளும் நடக்கும் நிகழ்ச்சியைக் கவனிப்போம்.

சீதையைக் கண்டதும் சூர்ப்பநகையின் மனம் திடீரென்று வேறுபட்டு "இவன் சொந்த மனைவியைக் காட்டிற்குட னழைத்துவர மாட்டான்; வேறிவளைப்போலொருவருமில்லை; இலக்குமி தேவியும் வருவாளோ"? என்று சந்தேகித்துச் சீதையின் அழகைப்பார்த்துப் "படைக்குநர் சிறுமையல்லால் எண்பிறங் கழகிற் கெல்லையில்லை; இவளைக் கண்டவுடன் பெண்ணாகிய என்னுடைய கண்களும் மனதும் வேறு பொருளிற் செல்லத் துணியாவாயின் இதைவிட வேறென்ன சிறப்பிருக்கின்றது" என்றெண்ணித் துணிந்தாள். மறுமுறையும் அவ்விருவரையும் ஒருங்குசேர நோக்கிப் "பிரமதேவன் உலகத்தாருள் ஆண் பெண்ணாகிய இருபாலாரின் அழகுக்குச்செய்த வரம்பு இவ்விருவராவர். ஆதலால் என்னைப்போல் இடையில்வந்த இவளை இப்பொழுது இகழ்விப்பேன்." என்று மனதிற் கொண்டாள்.

பிறகு இராமனிடம் "வீர, இதோ வருபவள் மாயக்காரி, வஞ்சனையரக்கி, இவள் மனக்கிடக்கை யறிய முடியாது; இவள் கூறுங் கூற்று உண்மையென நம்பொணாது; இவளுருவ மெய்யல்ல; ஊனுண்பாள்; இக்காரணங்களால் யானிவளைக் காண வஞ்சுகின்றேன்; ஆதலால் இக்கொடியாளை யகற்றுக" வென்று தன் நடையைச் சீதைமே லேற்றிக் கூறினாள்.

"ஒள்ளிது னுணர்வு மின்னே
யுன்னையா ரொளிக்கு மீட்டார்
தெள்ளிய நலத்தி னாலுன்
சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளவல் லரக்கி போலா
மிவளை நீ காண்டி"

என்று சிரித்துக்கொண்டிருக்கச் சீதையும் இராமன்பால் நெருங்கினாள். எரியனைய உள்ளத்தவளான சூர்ப்பநகை வரும் சீதையை நோக்கி "ஏ அரக்கீ! என் இடையில் வருகின்றாய்" யென்று கதித்தாள். அது கேட்டு அவளைக் கண்ட சீதை நடுநடுங்கி ஓடிவந்து தன் கணவன் தோளைத் தழுவிக்கொண்டாள். இஃதறிந்த இராமன்;

"வளையெயிற் றவர்க ளோடு
வரும்விளை யாட்டென் றாலும்
விளைவன தீமை யேயாம்"

என்பன வுணர்ந்து சூர்ப்பநகையை நோக்கி நங்காய்!

"உளைவன வியற்றல்; ஒல்லை
உன்னிலை யுணரு மாயின்
இளையவன் முனியும்"

ஆதலால் விரைவிற் செல்வாயாக'' வென்று கூறினான். "உலகத்தாரனைவரும், கருப்புவில்லியும் என்னை விரும்பி இன்னும் தவஞ் செய்கின்றார்கள். அங்ஙனமிருக்க நீ பொறுமையற்ற கள்ளியை நச்சி என்னை ஏன் இகழ்கின்றா யென்று சூர்ப்பநகை வினவக் கேட்ட விராமன் ஒன்றும் மறுமொழி புகலாது தன் மனைவியுடன் தம்பியாலமைக்கப் பெற்ற பர்ணசாலையுட் புகுந்தான்.

இவ்விருவரும் ஒருங்கே போதலைக் கண்ட அரக்கி வருந்திக் கதங்கொண்டு "இவனோ! அப்பெண்மணிபாலன்பு மிக்குடையன்; யானோ, இன்று இவ்வழகனது விரிந்த மார்பிற் சேரேனெனில் ஆவியிழப்பே'' னென்று புகன்று பளிக்கறையுடைய ஓர் சோலையுட் புகுந்தாள். அவ்வளவில் மாலையுஞ் செக்கரும் வந்தன.

அதுமுதல் அன்றிரவு முழுதும் சூர்ப்பநகை விரகதாபத்தால் துன்புற்ற விவரங்களைக் கம்பர் வெகு சமத்காரமாகக் கூறுகின்றார். ஒவ்வொரு செய்யுளும் இன்ப வீரச் சுவைகள் விரவி யமைந்துள்ளது. காம வின்பத்திலாழ்ந்து ஈடுபட்டவர்வீரமுங் குன்றப்பெற்றுக் "காமமுதிரின் உயிர்க்கின்னா'' என்பதற் கிலக்குமாவார்களென்று அறியுமாறு புனைந்து கூறுகின்றார் கம்பர். அவைகள் செய்யுள் நோக்கி களிப்படையத் தக்கன.

சூர்ப்பநகை அன்றிரவு முழுதும் காமத்தால் கலங்கி வருந்துங்கால் பொழுதும் புலர்ந்தது. உடனே யக்கொடியாள் "அவ்வழகன் அவ்வெழிலாள் பக்க மிருக்குமட்டும் என்னை எறிட்டுப் பாரான்; ஆதலாலவளை யவனிடமிருந்தகற்றி யொளித்து விட்டேனாயின் என்னை யேற்றுக்கொள்வா'' னென்றெண்ணி இராமன் காலைக்கடன் செய்யச்சென் றிருந்தபொழுது இலக்குமணன் காத்திருத்தலை யறியாது யாருமில்லையென் றெண்ணிப் பன்னசாலை நோக்கி ஒடி வந்தாள்.

வருவதைக் கண்ட இலக்குமணன் 'நில்லடீ'! என்று கூவிக்கொண்டே விரைந்து வந்தான். பெண்ணெனக் கருதி வில்லெடாமல் அவள் கூந்தலைத் திருகிப் பிடித்து வாள்கொண்டு மூக்கு, காது, வெம்முலைக் கண்கள், இதழ் முதலிய அழகுறுப்புக்களை முறையே அறுத்தெறிந்த பிறகு பிடித்த பிடியை விட்டான்.

அரிதலும், துயரும் அஞ்சி முன் தொடர்ந்திலாத தொல்குடிப் பிறந்தாளாகிய சூர்ப்பநகை அரக்கியுருக் கொண்டாற்றினாள். மேலெழும்பிக் குதித்து விழுந்து வருந்திப் பிதற்றிப் பெருமூச்சுவிட்டு அறுபட்ட அவயவங்களைத் திரும்ப அவ்வவ் விடங்களில் ஒட்டி நோக்கினாள். செங்குருதி யருவிபோற் பாய்தலைக் கண்டு வேதனைகொண்டு கூற்றுமுட்கும் தன் குலத்தினோரான இராவணன், கரதூடணதியர், இந்திரசித்து முதலியோரைக் கூவி, அனைவரும் கும்பகருணனைப்போ லுறங்குதிரோ? வென்று பலவாறு புலம்பிப் புரண்டழுது கொண்டிருக்கும்போது காலைக்கடன் முடித்துவிட்டு இராமனும் வந்தான். அவனைக் கண்டாள் சூர்ப்பநகை. வயிற்றி லடித் தழுதுகொண்டு "அந்தோ! உன் திருமேனிக்கு அன்பிழைத்த வன்பிழையால் எந்தாய்! யான் பட்ட பாடிது கா'' ணென்று கூறி இராமன் முன்னே விழுந்தழுதாள்.

இவளது கோர உருவத்தைக்கண்டு இவள் ஏதேனுந் தவறு செய்த காரணத்தால் இளையவன் இக்கோலஞ் செய்திருக்க வேண்டுமென் றெண்ணி, அவளை நோக்கி "நீ யார்'' என்று வினவினான். அதற்குச் சூர்ப்பநகை "ஐய! யான்;

"தெவ்வுரையென் றொருலகு மில்லாத சீற்றத்தான்
வெவ்விலைவே லிராவணனும் விண்ணுலக முதலாக
வெவ்வுலகு முடையானுக் குடன்பிறந்தேன்''

என்று மறுமொழி புகன்றனள். அங்ஙனமாயின் யாம் தவமியற்றுஞ் சூழலில் வரக் காரணமென்னை? எனக் கேட்கச் சூர்ப்பநகை "வெங்காம வெம்பிணிக்குமருந்தே யான்நேற்று வரவில்லையா''? என்றாள். மறுபடி "நேற்றுத் திருமகட்கொப்பாக வந்தவளோ நீ'' என்று கேட்ட இராமனுக்கு "அரசே! பெண்பாலார்தம் அழகுக்குரிய அவயவங்களை யரிந்தா லழகழியாதோ'' வென்றாளரக்கி.

பிறகு இராமன் இலக்குமணன் வாயிலாக நிகழ்ந்தவற்றை யறிந்துகொண் டிருக்கும்பொழுதே இடையில் சூர்ப்பநகை மனங்கொதித்து "மாற்றவளைக் கண்டால் மனமழலாதோ'' வென்று கூறினாள். அதைக்கேட்ட இராமன் "அரக்கீ! யாம் அரக்கர் குலத்தை வேரறுக்க வந்தனம்'' என்ற தொடக்கத்த வஞ்சின மொழிகள் கூறி "இவ்வனத்தைவிட்டு விரைவில் அகல்வாயென்று வெகுண்டு கூறினான்.''

அப்பால் சூர்ப்பநகை "ஐயன்மீர்! பிரமன் முதலிய தேவர்கள் இராவணனுக்குட்பட்டு நடப்பவராவர்; அங்ஙனமிருக்க இவ்வாறு செய்தல் நன்றோ? உன் தங்கை மூக்கறுபட்டாளென்று கூறுவாரின் நாக்கை யறுத்து விடுவனன்றோ என்னண்ணன் ராவணன்; நீவிரென் மூக்கையறுத்தவரல்லீர்; உங்கள் குலத்தை முதலோடு மறுத்தவராவீர்; ஆகலால் உங்கள் வாழ்நாள் நிலைபெறாது; என்னழகனைத்தையும் புல்லிடை யுகுத்த அமுதாக்கினிர்; எவ்வுலகத்தாரும் தத்தந் தலையைக் காத்து நிற்பதறிதென்றால் உங்களைக் காத்தற்குரியார் யார்?; விரகத்தினால் வருந்து மென்னுயிர் போகாமற் காத்தால் உங்களை யான் காப்பேன்; கற்புடை மாதர் தம் பெருமையைத் தாமே கூறாராயினும் உம்மிடத்துள்ள அன்பினால் யான் கூறுகின்றேன். தேவரினுமேம்பட்ட வலிமையுடைய ராவணனார் தங்கை யென்றாற் போதுமே; தவிர யார்வரினு முங்களைக் காப்பேன்; உங்களைச் சுமந்துகொண் டந்தரமாறுகச் செல்வேன்; உணவுக்கொத்த சுவைக்கனிகளும் பிறவும்உங்களுக்குக் கொண்டு தருவேன்; இங்ஙனமின்றிப் பூப்போலு மெல்லிய சரீரமுடைய அப்பெண்ணால் (சீதையால்) உங்களுக்கு ஏற்படும் நன்மைகளென்ன? ஆதலால்,

"குலத்தாலும் நலத்தாலும் குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலு மதியாலும் வடிவாலும் மடத்தாலும்
நிலத்தாரும் விசும்பாரும் நேரிழையார் என்னைப்போல்
சொல்லத்தானிங் குரியாரைச் சொல்வீரோ வல்லீரே.''

என் மூக்கை யறுத்தாலென்ன! நீவி ரேற்றுக் கொள்வீராயின் இப்பொழுதே யொருநொடிப் பொழுதில் அழகு செய்துகொள்வேன்; அஃதின்றாயினும் பெண் தன்மைக்கோர் பழுதுமின்று; மூக்கும் மாதர்க்கு மிகையேயாகும்; என்னுயிர் நுமதன்றோ? கண்டவர் காதலிக்கும் அழகு காரிகையார்க்குக் கடுவிஷத்திற் கொப்பன்றோ; கொண்ட கணவன் கண்டு களிப்புறும் வடிவு குலமகட்குப் போதுமே! மும்மூர்த்திகளும இந்திரனும் கூடி நின்றாலொத்த எழிலமைந்தோய்!

"புவன மனைத்தையு மொருதன்
பூங்கணையா லுயிர் வாங்கும்
அவனுமுனக் கிளையானோ
இவனேபோ லருளிலனால்''

பொருகழலீர், இவள் நம்மைவிட்டுப் போகமாட்டாளென்றும், வேறொருவருமிவளைப் பார்க்கமாட்டாரென்று நினைத்து மூக்கரிந்தாற் பிழையாகுமா? இஃதெனக்குத் தெரியாதா? இவ்விவரம் அரக்கரறிந்தால் உலகை யழித்து விடுவார்கள். உயர் குலத்திற் பிறந்த

உங்களால் உலகழிந்ததென்னும் பழி வாராதிருக்க என்னைக் கூடி யின்புற் றிருங்களென்று கூறினாள்.

இங்ஙனம் சூர்ப்பநகையின் சொற்பொழிவைக் கேட்ட ராமன் புல்லொழுக் கரக்கீ! தாடகை முதலியோரைக் கொன்ற பாணங்களிருக்கின்றன. தவிர புல்லொழுக்காளரைப் பூண்டோடு தொலைக்கப் பூண்ட விரதத்தினன் யான்.

தரையளித்த தனிநேமித் தயரதன்றன்
புதல்வரியாம் தாய்சொல் தாங்கி
விரையளித்த கான்புகுந்தேம் வேதியரும்
மாதவரும் வேண்ட நீண்டு
கரையளித்தற் கரியபடைக் கடலரக்கர்
குலந்தொலைத்துக் கண்டாய் பண்டை
வரையளித்த குலமாட நகர்புகுவேம்
இவைதெரிய மனக்கொள்.

அன்றி, எங்களை மானிடரென் றெண்ணாது முடியுமேல் அரக்கரில் வலிமையுடையாரென்று குறிப்பிட்டவரை யழைத்துவருக! உன்னெதிரில் வைத்தே யவர்களைக் கோல்வோம்'' என்றான்.

மறுபடியும் ஏகாத அரக்கி "ஐய! அங்ஙனமாயினும் என்னைப் பற்கள் தெரிகின்ற பிளவுபட்ட வாயரக்கியென்றிகழ்த் தகற்றாது ஏற்றுக்கொள்வீராயின் நீவிர் குறித்தபடி இயற்றலாகும். அவர்களின் மாயங்களையெல்லாம் நீவிர் எளிதிலறியலாம். என் மாற்றாளாகிய அப்பெண்மணியைக் கைவிட உங்கட்கு மனமின்றாயின் யானும் மிகையில்லை. அரக்கரோடு பொரவமைந்தால் அவர்கள் செய்யும் மாயங்களைத் தடுப்பேன். அண்ணலே! யானுனக்கு மிகை யென்றால் உன் தம்பியிடமாவது என்னைச் சேர்த்து வைப்பீர். நீவிர் மீண்டும் நாடு புகும்போது வேண்டுமுருவ மெடுத்துக் கொள்கின்றேன். இளையவனும் "யான் மூக்கிலாளொ டெங்ஙனங் கூடிக் குலவி யிருப்பே'' னென்றால் அதற்கு "யானிடையிலாதாளொடு சேர்ந்திருக்கவில்லையா'' வென்று கூறி இசைவிப்பா, யென்று மன்றாடி வேண்டினாள்.

இதுகேட்ட இளந் தோன்றலாகிய இலக்குமணன் வெகுண்டு "இவளை இத்தருண முயிர் போக்காவிடில் இன்னும் பிதற்றுவாள்; இன்னுமிவளிடங் கருணைகாட்டலிழுக்காகும்'' என்று கூறலு மிராமன் "இவளிவ்விடம் விட்டுப்போகாளாயின் அவ்வாறாகுக'' வென்றுகூறினான்.

இம்மாற்றங்கேட்ட சூர்ப்பநகை இவர் தன்பா லிரங்காரென மதித்து "ஐயன்மீர்! யானிதுகாறுங் கூறியவை உங்கள் மனதை யறியும்பொருட்டே யாகும். யானிக்கணமே சென்று,

"காற்றினிலுங் கனலினிலுங் கடியானைக்
கொடியானைக் கரனை யுங்கள்
கூற்றுவனை யிப்பொழுதே கொணர்கின்றேன்''

என்று கதங்கொண்டு கூறிச் சென்றாள்.

சென்ற சூர்ப்பநகை இங்கு நடந்த விவரங்களனைத்தையும் சனத்தானத்தில் தனக்குதவிக்கு வந்திருக்குங் கரதூடணதியரிடஞ் சென்று திருத்தியும் மறித்துங் கூறினாள். அவர்களும் அவள் கூறியதைக் கேட்டு வெகுண்டு தம் படைகளோடு வந்து இராம லக்குமணரிடம் பொருதனர். இராமனு மவர்களைக்கொன்று வீழ்த்தினான். இதைக் கம்பர் பெருமான்;

அஞ்சிறை யறுபத மடைந்த கீடத்தைத்
தஞ்செனத் தன்மய மாக்குந் தன்மைபோல்
வஞ்சகத் தரக்கரை வளைத்து வள்ளல்தான்
செஞ்சரத் தூய்மையாற் தேவ ராக்கினான்

என்று பிரமரகீட நியாயமாக்கி யழகுபடப் புனைந்துள்ளார். அதாவது அழகிய சிறகுகளுடைய வண்டுகள் புழுக்களைக் கொடுவந்து தம் கூட்டிலடைத்து வைத்து அவைகளைத் தம் மினமாக நாளடைவிலாக்கிக் கொள்வதுபோல வஞ்ச வாழ்க்கை யரக்கரை வள்ளலாகிய இராமன் தன் தூய்மையாகிய பாணங்களால் தேவராக்கினான் என்பதாகும். கரதூட ணதியர் தம் படைகளோடு முடிந்ததைக் கண்ட சூர்ப்பநகை இராவணனிடமறிவிக்க இலங்கைமா நகருக்குப் புறப்பட்டாள்.

R. முத்தையர்.

தமிழ்ப் பாடம் 40.

நள வெண்பா

(771-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவான் மேல்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற்
ஒளிப்பான்போற் பொற்றேருடன். [பாரை 87.

இந்தச் செய்யுள் சூர்யாஸ்தமனத்தைச் சொல்கின்றது. சூரியன் மறைந்ததால் விளைந்த இருளூடே நளனும் தமயந்தியும் சென்றனர் என்பது அடுத்த பாட்டில் வரும் செய்தி.

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான லடம்பின் கவட்டிலைகள்—மானின் [றுன்
குளம்பேய்க்கு நண்ணுடன் கோதையொடுஞ் சென்
இளம்பேய்க்குந் தோன்றா விருள். 88.

குறிப்பு:— இருளை வருணிக்கின்ற சொல்லாற்றல் புகழேந்திக்கு நன்கு அமைந்துள்ளது. முன்னோரிடத்தில், "கழுதும் வழி தேடுங் கங்குல்" (சுயம்வர காண்டம், 113-வது செய்யுள், 408-வது பக்கம்) என்றவர் இங்கு, "இளம்பேய்க்கும் தோன்றாத இருள்" என்றனர். இளம் பேய்க்கும் வழிதோன்றாத இருள், என்பது பொருள். பேய்க்கும் என்பதிலுள்ள உம்மை, உயர்வு சிறப்பும்மை. பேய்கள் எவ்வளவு அடர்ந்த இருளிலும் வழிதெரிந்து செல்லக் கூடும். அப்படிப்பட்ட பேய்க்கும் தோன்றாத இருள் என்பதால், அவ்விருளின் மிகுதி சிறக்கின்றது. இதனுடன் நில்லாமல், இளம் பேய்க்கும் தோன்றாத இருள் என்பதால், அவ்விருள் பின்னும் அதிகமாக அடர்ந்திருந்த தென்பது தெரியலாகும். முதிய பேய்கள் இவ்விருளிற்கு அஞ்சி வெளி வருவதற்கே நினையா. இளங்கன்று பயமறியாதாதலால் பேய்க்கன்றுகள்தாம் துணிந்து இவ்விருளில் வழிதேடிச் செல்லலாமென வரும். அவ்விதம் துணிந்து வந்த இளம் பேய்களும் வழியறியாமல் திகைக்குமெனில் இருளினடர்த்தி எத்தகையதா யிருத்தல் வேண்டுமென்பதை நினைத்துக் கொள்ளுங்கள்.

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிப்போய்
வெங்கா னகந்திரியும் வேளைதனில்—அங்கேயோர்
பாழ்மண்ட பங்கண்டான் பால்வெண் குடைநிழற்
வாழ்மண் டபங்கண்டான் வந்து. [நீழ் 89.

இத்தகை இருளில் தங்குமிடந்தேடி யலைந்த நளன் ஓர் பாழ் மண்டபத்தைக் கண்டான்.

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து. 90.

கண்டு, 'இவ்விரவு இங்குத் துயில்வோம்' என்று தமயந்தியை அம்மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான்.

வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து [சோர்த் 91.

பதப்பிரிவு:—வையம் உடையான் மகர யாழ் கேட்டு அருளும் தெய்வ செவி கொதுகின் சில் பாடல் இவ் இரவில் கேட்ட ஆ என்று அழுதாள் கெண்டை அம் கண் நீர் சோர தோட்ட வார் கோதையாள் சோர்ந்து.

அன்வயம்:—"மகரயாழ் கேட்டருளும் வையம் உடையான் தெய்வச் செவி, இவ்விரவில், கொதுகின் சில்பாடல் கேட்டவா" என்று, தோட்ட வார் கோதையாள், கெண்டை அம் கண்ணீர் சோரச் சோர்ந்து அழுதாள்.

பதவுரை.

"மகரயாழ் - மகரவீணையின் இசையை
கேட்டு அருளும் - கேட்டு அருள்கின்ற
வையமுடையான் - பூமிக்கு அரசனாகிய இவனது
தெய்வ - மேன்மை தங்கிய
செவி - காதுகள்
இவ் இரவில் - இந்த இராத்திரியில்
கொதுகின் - கொசுக்களினுடைய
சில் பாடல் - பாட்டொலியை
கேட்டவா - கேட்கவும் நேர்ந்ததே"
என்று - என்று,
தோட்டம் - மலர்களை யணிந்த
வார் - நீண்ட
கோதையாள் - கூந்தலையுடைய தமயந்தி,
கெண்டை - கெண்டை மீனை ஒத்த
அம் - அழகிய
கண் - கண்களிலிருந்து
நீர் - நீர்
சோர - வடிய
சோர்ந்து - சோர்வடைந்து
அழுதாள் - அழுதாள்.

விரிவுரை:—தனக்கும் தன் நாயகனுக்கும் ஒருங்கே வறுமைவந் துற்றதாலும் உத்தம பத்தினியாய தமயந்தி, தன்னிலை மறந்து அவன்கதி கண்டு இரங்குகின்ற மேன்மையை இங்குக் காண்கிறோம். கொசுக்கள் மொய்க்கின்ற அப்பாழடைந்த மண்டபத்தில் ஆவிபோல் ஆடையும் ஒன்றாய் இவ்விருவரும் எய்தினர். எய்தியவுடன், நளனுக்கு முன்னிருந்த செல்வமும் இப்பொழுது அவன் அடைந்த நிலையும் நினைத்த தமயந்தி அவனைக் குறித்து அழுகின்றாளேயன்றி, "ஈசா, என்கதி இப்படியாயிற்றே," என்ற வருத்தம் தன்பொருட்டு அவளுக்குத் தோன்றவில்லை.

பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்ட னிழலிற் குழைதடவும்—கெண்டை
வழியனீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்றா னரசு. 92.

பதப்பிரிவு:—பண்டை வினை பயனை பார் இடத்தில் ஆர் கடப்பார் கொண்டல் நிழலில் குழை தடவும் கெண்டை வழியல் நீர் என்றான் மனம் நடுங்கி வெய்து உற்று அழியல் நீ என்றான் அரசு.

பதவுரை.

அரசு - நளவேந்தன் (தமயந்தியை நோக்கி)
"பண்டை வினை - முன் செய்த வினைகளால் விளையும்
பயனை - பயன்களை
பார் இடத்தில் - இந்தப் பூமியில்
கடப்பார் - (அனுபவிக்காது) விலக்கக் கூடியவர்
ஆர் - யாரிருக்கின்றனர், (ஆதலால்)
கொண்டல் - மேகம்போன்ற உன் கூந்தலின்
நிழலில் - நிழலிலே
குழை - குண்டலங்களை
தடவும் - தொடுகின்ற
கெண்டை - கெண்டைமீன் போன்ற கண்களிலிருந்து
நீர் - நீரை
வழியல் - பெருக்காதே"
என்றான் - என்றான் (அவளோ பின்னும் அழுவது கண்டு)
"மனம் - மனம்
நடுங்கி - நடுங்கி
வெய்துற்று - புழுங்கி
அழியல் - கரையாதே"
என்றான் - என்று தேற்றினான்.

விரிவுரை:—வருந்துகின்ற தமயந்திக்கு "விதியை நினைத்துக் கொள்" என்று நளன் ஆறுதல் அளிக்கின்றான். அவளுக்கும் கருத்ததுவே என்பதைமுன் 85-வது செய்யுளில் பார்த்தோம். கண்ணிரண்டும் ஒன்றையே நோக்குவது போல், துன்பத்தினுள்ளும் இவ்விதம் மாறுபடாச் சிந்தையராகின்ற இன்பம் இவர்களுக்குளது.

"கொண்டல் நிழலில் குழை தடவும் கெண்டை" யென்பதிலுள்ள கொண்டல், கெண்டை என்னுஞ் சொற்கள் உவமையாகு பெயர்களாய்த் தமயந்தியின் கூந்தலையும் கண்களையும் குறித்து நிற்கின்றன. குழை என்றால் தளிர் என்னும் ஒரு பொருளும் உளது. மேகத்தின் நிழலில் தளிர்களை வந்து தீண்டும் கெண்டைமீன், கூந்தலிற் கடியில் பார்வையால் காதிலணிந்த குண்டலங்களைத் தீண்டும் கண்ணிற்கு உவமையாயிற்று.

"மனம் நடுங்கி வெய்துற்று அழியல்" என்றது அடங்காதழுத தமயந்தியைப் பின்னுந் தேற்றியதாம்.

குறிப்பு:—அழியல், வழியல் என்பன வினை முற்றுக்கள். வா போ பேசு பார், என்பனபோன்ற வினைகள் முன்னிருப்பவரை நோக்கி ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏவுவதால், இப்படி வருகின்ற வினைச் சொற்களுக்கு ஏவல் வினை என்று பெயர். ஆங்கிலத்தில் Verbs in the imperative mood இதற்குநிகராகும். ஒன்றைச்செய் என்று சொல்கின்றவினைகளும் ஏவல்வினைகள்தாம்; ஒன்றைச் செய்யாதேஎன்று சொல்கின்ற வினைகளும் ஏவல் வினைகள்தாம். செய்யாதே என்று மறுக்கின்ற ஏவல் வினைகளுக்கு எதிர்மறை ஏவல்வினை என்பது பெயர். செய்என்று சொல்கின்றவை உடன்பாட்டு ஏவல்வினை. உடன்பாட்டு ஏவல் வினையோடு அல் என்னும் விகுதி

சேர்ந்தால் அது எதிர்மறை ஏவலாகிவிடும். வழி, அழி என்பனவற்றோடு அல் விகுதி சேர்ந்து வழியல் அழியல் என்று வந்திருப்பதால் இவை எதிர்மறை ஏவல்வினை முற்றுக்கள்.

விரைமலர்ப்பூ மெல்லணையு மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும்—அரசேநான்
காணேனிங் கென்னக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணேர் முலையாள் புலர்ந்து. 93

பதவுரை.

ஏர் - அழகை
பூண் - பூண்ட
முலையாள் - முலைகளையுடைய தமயந்தி,
புலர்ந்து - வாடி,
"அரசே - அரசனே,
விரை - வாசனைபொருந்திய
மலர் - மலர்களால் ஆகிய
பூ - அழகிய
மெல் - மிருதுவான
அணையும் - படுக்கையும்
மெய் - சரீரத்தை
காவல் - காப்பதை
பூண்ட - மேற்கொண்ட
பரிசனமும் - பரிசனங்களும்
பள்ளி அறையும் - படுக்கையறையும் (உனக்கு அமைந்திருக்க)
இங்கு - இவ்விடத்தில்
நான் - நான்
காணேன் - காணவில்லையே"
என்ன - என்று
கண் - கண்கள்
பனிப்ப - நீர் துளிக்க
கலங்கினாள் - கலங்கினாள்.

தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து. 94.

பதப்பிரிவு:—தீய வனமும் துயின்று திசை துயின்று பேயும் துயின்றது (ஆல்) பேர்யாமம் நீயும் இனி கண்மேல் துயில்கை கடன்என்றான் கைகொடுத்து மண்மேல் திரு மேனி வைத்து.

அன்வயம்:—"பேர்யாமம், தீயவனமும் துயின்று திசையும் துயின்று பேயும் துயின்றது. நீயும் இனிமேல் கண் துயில்கை கடன்" என்று, (நளன்) மண்மேல் திருமேனி வைத்துக் கைகொடுத்தான்.

பதவுரை.

"பேர்யாமம் - இந்த நடு நிசியில்
தீய - கொடிய
வனமும் - வனத்திலுள்ள ஜந்துக்களும்
துயின்று - தூங்க
திசை - எட்டுத்திக்கிலுமுள்ள உயிர்கள்
துயின்று - தூங்க
பேயும் - பேயும்கூட
துயின்றது - தூங்கிவிட்டது
நீயம் - நீயும்
இனிமேல் - இனிமேல்
கண் துயில்கை - கண் தூங்குவது
கடன் - முறை"
என்று - என்று கூறி
மண்மேல் - தரையின்மேல்
திரு - தன் அழகிய
மேனி - சரீரத்தை
வைத்து - கிடத்தி
கை - தன் கையை (தமயந்திக்கு)
கொடுத்தான் - தலையணையாகக் கொடுத்தான்.

விரிவுரை:—பாட்டுக்களில் சொற்களையும் விகுதிகளையும் ஒன்றைவிட்டுப் பிரித்து வேறொன்றோடு கூட்டிப் பொருள் கொள்ளவேண்டி நேரிடும். அப்படிச் செய்து பொருள் கொண்டதற்கு இந்தச் செய்யுளில் இரண்டு உதாரணங்கள் இருக்கின்றன. "நீயும் இனிக் கண்மேல் துயில்கை கடன்" என்று வருவதில் 'கண்மேல்' என்பதிலுள்ள 'மேல்' என்னும் சொல்லைப்பிரித்து எடுத்து 'இனி' என்பதோடு கூட்டி "நீயும்இனிமேல் கண் துயில்கை கடன்" என்று கொண்டோம். அவ்வாறே 'என்றான் கை கொடுத்து' என வருவதில், 'என்றான்' என்பது வினைமுற்றாகவும், 'கொடுத்து' என்பது வினையெச்சமாகவும் செய்யுளில் இருந்தபோதிலும், நாம் இவைகளை "என்று கொடுத்தான்" என மாற்றி, முன் முற்றாயிருந்ததை எச்சமாகவும் முன் எச்சமாக இருந்ததை முற்றாகவுங் கொண்டோம்.

குறிப்பு:—(1) வனம், திசை, என்பன அவ்விடங்களிலுள்ள பிராணிகளைக் குறிக்கின்றபடியால் இவை இரண்டும் இடவாகு பெயர்கள் (614 வது பக்கம்)

(2) துயின்றதால், என்பதிலுள்ள ஆல், அசை. அதற்குப் பொருள் இல்லை. துயின்றது, என்பதுதான் பொருளுக்கு வேண்டிய சொல். (15 வது பக்கம்)

(3) 'நீயும்,' எனபதிலுள்ள உம் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்தஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா:— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனும். டெலிபோன் நெ. 3311.

காந்திமதி என்னும்

காந்தார நாட்டுக் கட்டழகி.

(773-வது பக்கத் தொடர்ச்சி)

32. அடிகளும் கள்வரோ!

விரைந்துவந்தவவ் வொற்ற னிரைத்திரைத் தெதிர்நிற்க, "உற்றதை யுரை" என விராடன் வினவுதலும், அவன் இரக்கமுடன், "ஐயனே, என்புகல்வேன்! எம்மருங் கோமகன் இன்றிறந்தான். அவனைக் கொன்றோரும் பொன்றனர் என்பதா லேது பயன். காந்தாரமும் இன்று கண்ணிழந்தது," எனப் பகர்ந்தான். உருகிய கல்லென அனற் பிழம்பாயிருந்த விராடபத்திரனுடைய வன்னெஞ்சு இவ்வுரையை உட்கொள்ள உறையலாயிற்று. கையிற் கழன்றிருந்த வாளினை ஒரு முறை உற்று நோக்கினன். அரசனையும் இவ்விரவே அவ்வாளால் துடைத்துவிட்டால் நாளைத் தான் சிங்காதன மேறுதற்குத் தடையொன்றுமினி இலதாகும் எனும் கொடிய கருத்தினுல் அவன் தன் கைவாளைக் கறுவி நோக்கினன் என்பதறியாத அப்பேதை ஒற்றன், இளவரசன் இறந்தானெனும் தீச்சொல் கொணர்ந்ததற்காகத் தன்னையே சுளிகின்றான் என்றஞ்சி அவன் பாதங்களில் விழுந்து, "தலைவா, வல்வினையேன் வாயால் இச்சொல் வழங்குமா நேர்ந்ததற் கழுங்குகின்றேன். ஏழையேன் மீது வெகுளல்" என்றென் றிறைஞ்சினன். எனினும், இவனுக்கிது உகந்த தென்பத நினைவிற்குவரத் தன்பேதைமையை யுள்ளிக் கடிதெழுந்து ஒதுங்கி நின்றனன்.

விராடன்சென் றங்கோ ராதனத் தமர்ந்து 'நிகழ்ந்தன யாவும் எனக்குரை" எனப் பணித்தனன். இதன்மேலவ்வொற்றன் சித்திரமோகன மாளிகையின்கண் அன்றுமாலை நடைபெற்றனவற்றை உரைக்கலுற்றான். அவ்வாறு உரைத்துவருகையில் தூக்குமரத்தி னடியில் நரபாலன் கஜேந்திரஸிம்மனுக்கு விராடனைப்பற்றி உரைத்த மாற்றமும் அதற்காதாரமாய் அவன் கொடுத்த நிருபமும் இவன் அறிந்திருந்தா னெனபோதிலும் அதனை விராடனுக்குக் கூறவஞ்சிச் சொல்லாது விடுத்தனன். விராடன் கைக்கத்தி இவன் நாவை இங்கு நிறுத்தியது. இந்தப் பாகத்தை ஒற்றன் சொல்லி முடித்தபோது, "விராடனுக்கு மிப்பாதகத்தில் பங்குளது" என்று நரபாலன் வெளிப்படுத்தி விட்டனனோ வெனத் துணுக்கத்தால் உழன்றிருந்த இவனுள்ளம் உற்றதோர் படபடப்பு ஓயலாயிற்று. "மாளிகையுள் இவையெலாம் நிகழ்ந்தபின், தலைவ, கஜேந்திரஸிம்மனும் மணிவாளனும் காஷ்மீர வேந்தனும் இந்நகர்க்கு வழிக்கொண்டு இன்றிரவு பிரதாபதீரரது மனையில் தங்கி யிருக்கின்றனர். புலரியோடவர்களும் இங்கு வந்து சேருவார்," என விளம்பி நின்றனன் அவ்வொற்றன்.

இதன்மேலினிச் செய்ய வேண்டியவைகளை விராடன் சிந்திக்கலுற்றான். நன்னெறி நடக்க நினைப்பவர்களே அதனை நாடியடைதல் வேண்டும். தீநெறிப்படர நினைப்போர்க் கொன்று நினைத்தமாத்திரையில் தென்படுவ தருமையன்று. உழல்வது காடேயாயின் எச்சிறையொதுங்கினும் உற்றது காடே யாகும்.

எழுந்தனன் விராடன், நேராகச்சென்று இரண்டு நிருபங்கள் தீட்டினன். தீட்டியவைகளில் வேந்தனது கையெழுத்தும் முத்திரையும் கூசாது பொருத்தினன். அக்கடிதங்களில் ஒன்று பிரதாபதீரரது மனையில் இதுபோது வைகுமம் மூவேந்தருக்கும் வரைந்தது. மற்றதற்குக்குறி அப்பிரதாபதீரனே. முதலாய முடங்கலில் வரைந்தவுரை பின்வருமாறு :—

இரத்தினபுரி,
பகைவர்காள், விஜயதசமி

நம் புல்லிய தலைமேலாணை இந்நகர் நண்ணற்க. எம்முடைய இளமகனைக் கொலைகண்ட கொடியீர், இன்னதற்குக் காரணந்தான் நீவிரல்லரென யாம் ஆய்ந்து தெளிவதன்முன் எமதெதிர் வருவீராயின் விளிந்தீர். அவ்வவர்க்குரிய விடம் அங்கிருந்தே ஏகுக. எம்பணி யாதெனப் பின்னர்ப் பொறித்தனுப்புவோம்.

விச்வகேசரி.

பொழுது விடிந்ததும் புகுந்து தன் தந்திரங்களை இடையே தடுத்துவிடுவார் என்ற பயத்தினுல் அவ்வேந்தர் மூவரையும் இந்நிருபத்தால் அகற்றுதற்குச் சூழ்ந்த விராடபத்திரன் அவ்வகைக் கருத்தேகொண்டு தளபதி பிரதாபதீரருக்கும் எழுதிய கடிதம் இவ்வாறு :—

இரத்தினபுரி,
விஜயதசமி

பிரதாபதீரர் அறியவும்,

நின்கை அடைத்திருந்த எம்மொரு குமாரனைக் கொலைபோக்கிய கொடுமை ஆற்றுந்தன்மைத்தன்று. நின துடன்பாடு இதனில் எத்தூ மென்று யாம் ஆராய்ந் தறியுங்காறும் நின்னிழல் எந்தலைவாயி லாடவேண்டா.

விச்வகேசரி.

இவ்விரண்டு கடிதங்களையும் விராடபத்திரன் தனதொற்றன் கையிற்றந்து, "காற்றெனக் கடுகி நீ சிகாவிலாஸம் இவ்விரவே சேர்ந்து, இக்கடிதங்களைக் கொடுத்திடு" என விதிக்க, அவனேகுமளவில் "யானனுப்பியதாகக் கூறவேண்டா. வேந்தனே உன்னை இம்முடங்கலுடன் போக்கினனென்று புகல்" என மீண்டும் உரைத்து அவனைப் போக்கினன்.

அன்னவன் போயபின்றை விராடன் ஸ்ரீ அகிலாண்டேச்வர சுவாமிகள் துயிலறை வாயிலின் கதவை மெல்லத்தட்டி அவரழைக்கவும், உட்புகுந்து, "அடிகளினருந்துயிலை இடைகடிந்து வந்ததற்கு வருந்துகின்றேன். ஆயினும் அடியேனைப்போல் நுமக்கும் இந்நாட்டின் நலத்திற் கருத்துளதாதலால் அதன்பொருட் டிவ்வுறக்கத்தைச் சிறிது துறக்க இணங்குவீர்" என்றனன். விராடனது உறவை என்றுமே பெரிதும் விரும்புதலில்லா மடாதிபதி இவ்வகை இவன் இன்று தன்னையும் உளப்படுத்தி உறவுற வருவதை வெறுத்தனராகி ஆர்வமழிந்து குரலோடு, "யான் என் செய?" என்று மொழிந்தனர்.

"நாளைக் காலையில், பெருங்குன்றத் தலைவர்களுக்கிடையே நிறுவிய இப்போர் நிகழ்வது நுமக்கும் எமக்கும் இந்நகரிற்கும் நலமெனக் கருதுகின்றீரோ, வேறுதான் கருத்துண்டோ? விளம்புவீர்"

"விராட, இப்போரின்பால் இக்காலம் நீ எய்தும் பரிவு வியப்பிற்கிடனா யிருக்கின்றது. எம்மிறை யொரு மைந்தன் ஆருயிர்க் கிறுதிகாணும் நிலையிலிருக்கின்றான். அவன் பிழைப்பதும் இறந்ததும் இன்னுந் தெரிந்திலம்.

இந்நிலை நினைக்க யான் நித்திரையின்றி நைகின்றேன், நீயோ அயலொன்றை யாராயப் புகுகின்றாய்".

விராடனிற் கிதுகாறும் தன்னுரையின் முறையின்மை தெரிந்ததில்லை. மடாதிபதி இங்ஙனம் இடித்துரைத்தபின் மேலினி இயம்புவதறியாமற் சிறுதிகைப் பெய்தினனெனினும் அதனைத் தன் முகத்தில் தோற்றவிடாமல் உள்விழுங்கி "ஐய, மடத்திற் கதிபதி நீவிராணலும் கடவுளிடத்தில் நம்பிக்கையுள்ளவன் இக்காலம் நானேயா யிருக்கின்றேன். ஈசன் இருக்கும்வரை என் மகனுக்கு எக்குறையும் நேர்ந்திடாது. கடவு ளொருநாளு மவனைக் கைவிடார் என்னும் உறுதியால், துணைக்குமோர்படை அவ்விடம் அனுப்பியபின், மேலினி நிகழ்வதற் குளவற்றைச் சிந்திக்கலாயினேன். அடிகளுங் கடவுளை மறந்ததென் மாயமோ!" வென, இடிக்கவந்த அவர் சொல்லை எதிருருட்டிப் போக்கினன். கடவுளைப் பற்றிநின்று கவற்சியற்ற உத்தமரில் இவ்விராடன் ஒருவனல்ல னென்பது அகிலேண்டச்வரர் உணர்ந்தவராகையால் இதனைப் பொருட்படுத்தவில்லை: ஆயினும் அவர், இவன் நினைவுமூட்டிய கடவுளைக் கருத்தால் இறைஞ்சிச் சிறிதுபோது சும்மாவிருந்தனர். வெருத்ததோ வெருத்ததோ என்னுங் கவலையால் கீழ்த்திசையிற் கண்ணுயிருந்த விராடன், மடாதிபதியை நோக்கிச் "சுவாமிகாள், முன்னர் நான் வினவியதற்கு இன்னும் விடை பகர்ந்திலீர். நாளைப் போர் நடப்பதே நுமக்கு நலனென உய்த்துணருகின்றீரோ" வென மீண்டுங் கேட்டனன். "கடவுளை நம்பினோர்கள் இக்குன்றவர் இடும் போரினுல் தமக்கொரு நலமுண்டென்றேனும் இலதென்றேனும் நினைப்பானேன், ஈசன் செயல் இயன்றபடி நிகழும்" என்ற பதில் அவர் மனதில் தோன்றாததாலோ, தோன்றிற்றேனும் விராடனது எண்ணம் யாதென வறிய விரும்பியோ, மடாதிபதி அது கூறாது, "அரசனோ அது நிகழுமாறு பணித்துளான். இருதிறத்தோரும் வந்தும் இறுத்தனர். இப்போரினுல் விளையும் நலந்தீமைகளை ஏற்பதற் கிருப்பவர் பெருங்குன்றத்தவர். என்வரையில் அது நிகழ்ந்தாலென், நிகழாதொழிந்தாலென்!" என்று சாற்றினர்.

"நும் மடத்திற்கும் எம்மதத்திற்கும் துரோகஞ் செய்த தயாபரர் சென்றவிடந் தெரிந்த நீர் இது செப்புதலழகன்று. அதுவன்றி, இவ்விரத்தினபுரிக்குக் குன்றுறை குறவர்களாலுறும் இடுக்கண் இருந்தவாறும் அறிந்துளீர். அன்னநீர், மதம்பிழைத்தோர் அக்குன்றத்தைப் புகலிடமாய்க் கொள்ளாதவாறும், நும்மடம் நின்ற இந்நகர் இரவிலே அவர்களால் கொள்ளையாலுங் கொலையாலும் பழுதுறா தமையுமாறும் காப்பதற் கியன்றதொரு கருமம் வந்தெய்துமாயின் அதனைப் போற்ற வேண்டாவோ, கூறுக!"

"இருபத்தெழுபதின்மர் இருதிறத்திலும் பற்றிப் பொருதல் இன்னதற் குதவுத லெங்ஙனம்?"

"குன்றத் தலைவர் இருவரும் ஒத்துவாழ்ந்தால் அவ்வொற்றுமைப் பலத்தில் நமது ஆட்சியும் கோலும் அவர் மாட்டுச் செல்லவொண்ணா தாகின்றன. இன்று புரியும் அமரில் ஒருவர் மடிவர். பின் மற்றவரை அடக்கி விடுவது எளிது. ஆயின், இந்நகர்க்கு இரவுப் பயமில்லை. மதம்பழித்தோர் பிழைப்பதற்கும் வழியில்லை."

"யானிப்போரை வேண்டாவென்று விலக்க வில்லையே! என்பா லிதற்குக் காரணங்கள் உறவுற நீ காட்டுவானேன். நிகழ்வதானுல் நிகழட்டும்!"

"அடிகாள், இவ்வாறு இதனிற் கருத்தின்றி நிற்றல் போதாது. நலமென்று நான் காட்டிய காரணங்கள் நேரிதாயின் அது நிகழ்தலே வேண்டுமென்று செப்புவீர்...........நலமேயென் றியம்புமின்"

விராடனுடன் மேன்மேலும் உரைவளர்க்கும் விருப்பமிலராய் மடாதிபதி மனச்சலிப் பெய்தி இதனோடு முடித்துக் கழிக்குங் கருத்தில், "நலமே," என்றறைந்தனர். உடனே விராடனோ ஊக்கமுடன், "ஆயின், அன்னதற்கு இடையூறு எய்தாவண்ணம் காத்தல் நும் கடன் ஆகின்றது" எனத் தொடர்ந்தான்.

"என்னாற் செய்வதற் கிருப்பதைச் சொல்வாயாயின் செய்கின்றேன்" என்றார் மடாதிபதி.

"சற்றுமுன் மணிவாளனது ஆட்கள் நால்வர்வந்து இளவரசன் பெரும் விபத்தில் பட்டுளான் என்று நம்பால் இயம்பியதைப் பெருங்குன்றத் தலைவர் போர் முடியும்வரை நீ ரரசனுக்குச் சொல்லா திருத்தல்வேண்டும். இதுவே என் வேண்டுகோள்."

"எந்நிமித்தம் இக்கரவு சூழ்கின்றாய்?"

"நும்பொருட்டே! நனிசெப்பினீர்!"

"அரச னறியாதொழித லென்பொருட் டென்றுக்கோ?"

"அடிகாள், தீதுபட்டுத் தவிக்கின்றான் தன்மைந்தன், என்பதைக் கேட்பானுயின் கொற்றவன் அங்ஙனே கருத்தழிந்துப் பெருங்குன்றப் போர்க்கருமத்தைப் போகவிட்டுச் சித்திரமோகன மாளிகை நோக்கி விரைந்தேகுவான். இப்போர் இன்று நின்றதெனின் மீண்டும் நடைபெறாது. பிறகு வஜ்ரதரன் மாற்றிக் காலமாருதனும், காலமாருதன் மாற்றி வஜ்ரதரனும் இத்திரு நகர்க்கும் நும்முடைய மடத்திற்கும் நம்நாட்டு உயிர்களுக்கும் இடையூறே எக்காலும் இழைத்தவண்ணமா யிருப்பர். காலையிற் கதிரவன் தோன்றியவுடன் இக்கடும்போர் முடியட்டும். அதற்குள் நான் விடுத்துள அப்படையுளார் இளவரசனைச் சிறைமீட்டிக் கொணர்ந்து விடுவர் என நினைக்கின்றேன். இல்லையெனிற் பின்னர்க் கூறலாமே. நெடுந்தூரத்திற் கப்பால் நிகழ்வதை நமதரசன் நினைத்த மாத்திரத்தில் தடுக்கத்தான் இயலுமோ! ஆதலின், சிறிது பொறுத்தே அவனுக்கிது தெரியவருதலால் தீங்கொன்று மில்லையே!"

189023

மதத்தின்பாலும் மடத்தின்பாலும் அம்மடமிருக்கும் நகரின்பாலும் இருந்தவோர் ஆசாத்தினுல் மடாதிபதி விராடனது உரையில் உண்மையுஞ் சில உளதென மதித்து மறுநாள் போர் முடிவதன்முன் இளவரசனிருந்த நிலையைப்பற்றிப் புரவலனிற் கொன்றும் புகல்வதில்லையென ஒவ்வி, "விராடா, அவ்வாறே ஆகுக, ஆயினும் இதுகாறும் எனிச்செய்தி என்னின் றொளித்து வைத்தீர், என வேந்தன் வினவுங்கால் எப்பதிலுரைப்பதென்றோரா தேங்குமென் னுள்ளம்," எனப் பகர்ந்தனர்.

"கவலற்க, அடிகாள், கவலற்க. யானுளன். ஏற்றபடி கூறி எம்மிறைக்குச் சங்கையறச் செய்கின்றேன்.

"எற்புழிக்கூறும் வன்மை நினதியற்கையின் ஒரு கூறென்ப துணர்வேன். விராடா. காவலனுக்கு யான் இதுபற்றிக் கழறாதிருக்க இசைந்துளேன். அமர்கருதும் அச்சிலம்பரை நீ விரைவினிற் பொரவைத்து மேல் நிகழ்வன நேர்ந்துகொள்", என்றனர். விராடபத்திரனும் தனதறை சார்ந்தான்.

இளங்கோ இறந்தானென்றால் இனி அவ்வரசுக் கெல்லாம் இன்றே தான் உரியவன் என்ற எண்ணத்தால் பின்னுளதனிற்கோர் பழுதுறாவண்ணம் குன்றமர்ந்து குலைத்துவைக்கும் காவலரை ஒடித்துவைக்க வேண்டுமெனும் முன்புத்திகொண்டு விராடன் இவ்வகைச் சூழ்ந்தனன் என்பது எளிதிலுணர்தற் கொத்ததே. தன்

னறை புக்கவுடன் இக்கள்வனுக்குப் பின்னுமோர் சங்கை தோன்றியது. அரசனது ஆணையெனத் தான் மணிவாளன் முதலாய வேந்தருக்கும் தானைத்தலைவனுக்கும் விடுத்துள கடிதத்தை அவர் மதியாதுஞாயிறு எழுவதோடே அவர்களும் இந்நகர்வந் தேறிவிட்டால் என்செய்வ தெனக் கலங்கினான். "வன்மைமிகு வாசகங்கள் வரைந்துளேன். இளவரசன் இறந்துபட்ட இன்னலால் கொற்றவன் இன்னணம் பணித்துளன் என நினைத்து அவர் நேர்வந்து அவனைத் தேற்ற நினைப்பினும் நினைக்கலாம். மற்று, அம்மூவரும் ஒன்றுபட்டால் அரசனதாணைக்கு அஞ்சவும் அஞ்சார். அல்லாது, யானே இதுபுரிந்தேனென அயிர்ப்பினு மயிர்க்கலாம்......" என்றெலாம் எண்ணலாயினன் விராடன். பின், "இதற்குமோர் தந்திரம் நாடாது எஞ்சி நிற்பேனோ", எனத் துணிந்தான். அவ்வளவில் கீழிறங்கிவந்து காப்புப்படைஞர் நூற்றுவரை யழைத்து, "வீரர்காள், இப்புரியின் மீது பகைவர் சிலர் படையெடுத்து வருவதாகத் தெரியலாகின்றது. இமைக்குமுன் நீங்கள் சென்று குண்டிலினிப் பாலத்தைத் தகர்த்தெறிமின். உறுவதறிந்தால் இவ்வூராரஞ்சுவர். ஆதலின் ஓதையின்றி மெல்லச் செல்லுதல் வேண்டும்" என்று கட்டளை யிட்டனன். சிறிது நேரத்திற்குள் பாலம் முறிந்து நீரில் விழுந்த தமரம் இவன் செவிக்கு எட்டியது. இவ்வொலி கேட்டவர் மற்றவரெவரேனும் அந்நகரி லிருந்திருப்பாராயின் யாற்றிலே யாதோ மரம் முறிந்துவிழுந்ததென அயிர்த்து இருப்பர்.

இத்தகைய காவு வினைகளுக்கிடையே விராடன் அவ்விரவின் எல்லையை எய்த, நித்திரைக்கு நேரா நயனத்தனைய நிருபன் கதிரவனிலங்கர மொன்றிரண்டு வந்து தோன்றுமுன் தன் பள்ளிவிட்டெழுந்து மடாதிபதியைத் தன்பால் அழைத்துவருமாறு தன துழையருள் ஒருவனை அனுப்பினன். புலரிப்பூசையில் அன்னார் அமர்ந்திருத்தலால் அவர் வருதற்கு இன்னுஞ் சிலநேரம் செல்லுமென அவ்வாள் மீண்டு செப்பவே, வேந்தன் விராடனைக் கொணர ஏவினன். விராடன் இன்னுந் துயல் கழிந்து தன்னறை நீங்கியிலன் என்னுஞ் செய்தி கிடைத்தது. மன்னவன் இரண்டொரு நாழிகை கழித்துப் பின்னுமவ்விருபால் ஆட்களை அனுப்பினன். மீண்டும் இவனுக்கு அப்பதில்களே கிடைத்தன. பின்னுமோர்முறை அனுப்பினன். இன்னமும் அவர் வந்திலர். முன்னிரவு தான் சிகாவிலாஸத்திற்கு அரசனது ஆணையோடு அனுப்பிய அவ்வாள் வந்து செய்தியை உணர்ந்த பின்னரே கொற்றவனுக் கருகுசேரக் காத்திருந்தான் விராடன் பாலத்தை உடைத்திருக்க அவன்தான் எவ்வாறு வருவான் என்பதை மறந்தான் இவன். இனி அரசனது முகத்தை நோக்குதற்குக் கூசிய அகிலாண்டேச்வரர், விராடன் சென்று வேந்தனோடு சில பேசிய பின் போவதே தகுதியென்று தாழ்ந்திருந்தார். ஆகலாற்றான் அவர் பூசையும் இவன் தூக்கமும் இன்றுகாலை இவ்வாறு நீண்டன. விச்வகேசரிக்கோ பொறுமை யழிந்தது. "பூசையும் போதுமெனச் சொல்," என்று இன்னொரு ஆளை மடாதிபதியின்பால் போக்கினன். இனித் தாழ்வது நேரிதன்றென மடாதிபதியும் மன்னனிடம் வந்தெய்தினர்.

வந்தவரை வேந்தன் நோக்கி "அடிகாள், செய்தி யாது? யாவரும் சேமமோ?" என்றனன். அவரோ, "இந்நாள் விஜயதசமி யாதலால், அருச்சனைக்கு அதிக நேரம் ஆயிற்று. நின் திருமுன் வருதற்குத் தாழ்த்தேன்" என்று இயம்பினர். "மற்று?" என்று அரசன் அவர் முகம் நோக்க, அவரும் வெளிப்புறம் நோக்கி யாதும் இயம்பி இலர். நாமிவ்விருவரையும் இவ்வத்தியாயத்தின் முதலில் காண நேர்ந்தது இந்நிலையிற்றான்.

துயங்கிய முகத்தோடு தோன்றிய அரசனைக் காண மடாதிபதியின் உள்ளம் நெகிழ்ந்தது. சித்ராங்கன் நிலை யாவதாகுங்கொல் எனக் கவன்றார். நடுநிசியில் நிகழ்ந்தவற்றைக் காவலன்மாட் டுரைப்பதற்கின்றித் தான் விராடனுக்குக் கொடுத்த வாக்கை நினைத்து வருந்தினர். தன்னை யிவ்வாறு கட்டிவைத்த விராடன்பால் அவருக்கு வெறுப்பு மிகுந்தது. பெருங்குன்றப் போர்நடக்கவேண்டி இத்துணை ஆதாரங் கொண்டுள விராடன் யாதோ கரவு செய்து கவிழ்க்கநினைத்திருப்பானே யல்லாது நகரையும் மடத்தையும் கருதியே இது சூழ்ந்திருத்த லாகாதெனும் ஐயமும் எய்தினர். ஆதலாற்றான் அவர், "வேந்தே, நினக்கிது ஒவ்வாதாயின் ஒழித்தற்கு யாதுகொல்தடை?" எனச் செப்ப நேர்ந்தது. இதனின்று உரைதொடர்ந்து, "வாளும் உறையும்போல் நீவிரிருவரும் இணங்கியே நிகழ்கின்றீர்", என விச்வகேசரி அவரை இடித்துரைக்கலானதும் முன்னர்க் கண்டோம். கவர்ந்த பொருளோடு காணலுற்ற கள்வனெனக் கலங்கி நின்றார் ஸ்ரீ. அகிலாண்டேச்வர ஆசார்ய சுவாமிகள். தன்வரையில் தூயரேயாயினும் நொடிப் பொழுதேனும் தீயரோடிணங்கி யிருந்த தீமையை நினைத்துநினைத்து மிக வருந்தினர்.

T. N. சேஷாசலம்.

மலர்வனம்.

அன்னவ னியையுங் கொல்லோ!

உளையக் கூறுத லெஞ்ஞான்று மெளிது. மற்று, மறுப்பினும் இனிமையாரு மாற்றமே வழங்குஞ் செவ்வி மாண்புடை மக்கள் தம்பால் மகிழ்வுறக் காணலாமே. மண்ணுலுந் தசையாலு மிடைந்துழன்ற இந்நிலவுலக நிகழ்ச்சியூடே பெருந்தகைச் சொற்கள் கேளாப் பேதுற வெய்தி நிற்பீர், ஒலியாலு முயிராலு மியங்குகின்ற இலக்கிய உலகத்திலேனும் பாண்டியர்தம் பெருமான் அதிவீரராமன் நைடத நூலின்கண்ணே விண்ணவர் விடுத்த தூதுக்கு வினயமாய்ப் பகர்ந்த வார்த்தை உளங்கடந்துவகை பொங்கக் கேட்டினிதிருக்க வம்மின்.

பேரெழிற் பிறங்கும் பேதைத் தமயந்தி சுயம்வரம் வகுத்தாளென்று நாரதர் நவிலக் கேட்ட இந்திரன் ஆதியாய அமரர்தாம் வேட்கையுற்று, அன்னாள் அன்பெலா மமையப்பெற்ற நளனையே தம்பொருட்டவள்பால் தூதுபோக்கியது மல்லாமல், காதலையோதி அவளைத் தம்பால் மணம் இசைத்து வைக்குமாறு தூதியர் சிலரை விடுப்ப, எய்திய மகளிர்தம்மில் இமையவர்க்கிறைவன் தூதி, ஐயரி நெடுங்கட் செவ்வாய் அணங்கினிற்கு மணங்குபோல்வாளை நோக்கி, "ஐந்தரு நிழலில் அரசுவைகிய இந்திரன் பணியாற்போந்த என் செய்தியைக் கேள்' எனச் சீரடி வணங்கிச் சொல்வாள்:—

"வெம்பகை கடந்துவந்து கற்பக நிழலிற்றங்கி விண்ணெலாம் ஒருகோலோச்சும் எமதண்ணலுக்கு அமிர்தம் அன்னாய், அவனுக்கு உருவிலான் ஒருவனால் நேரும் பெருந்துயர் விலக்கல் வேண்டும். சதமகம் சாதித்து அன்னான் பெற்றதோர் பைம்பொன்னாட்டின் செல்வ

மெல்லாம் அவன்பால் நின் கடைக்கண் நோக்கம் சிறிதருள் புரிவாயாயின் இன்றே நின்னுடைமை ஆகிவிடும். அமரர்கோன் தன்னை நீமணந்து, தேனுந்தாதும் தூற்றுகின்ற ஐந்தரு நிழலிற்றங்கி, நீநாடிய யாவற்றையும் இருநிதிகளும் காமதேனுவும் விருப்புடன் நல்கப்பெற்று அரம்பையர் யாவரும் உன்பணி முறையே செய்ய, இதுகாறும் நீ தேவரென்று தொழுவோர் எல்லாம் உன்னை வந்து அங்குத் தம் தலைவன் தேவியென்று தொழுதிடப் பணித்தி."

விண்ணவரே விரும்பிவந்து இவ்வாறு மணம்பெற இரந்தாரென்றால் என்செய்வாள் தமயந்தி. பொன்னகர் பகட்டும் புலோமிசை பதவியும் இவளுள்ளத்தைக் கவர்ந்ததில்லை. ஆற்றல்சால் நளனேயன்றி ஆருயிர் பிறிதின்றென நின்ற இவ்வரசிளங் குமரி, "இந்திரனைப் பொருந்திவாழ இசைந்திலேன்" என்ற இக்கருத்தைத் தருக்கித்தான் உரைப்பதாகத் தோன்றாமலும், இந்திரன் செவிக்கிது சேருங்கால் நொந்திடாமலும் தெரிவிக்க நினைத்தாளாகி,

"என்னுளத் தென்று நீங்கா
திருப்பவ னளனே யாகும்
பொன்னகற் கிறைவன் தன்பால்
பொருந்துதி யென்றுந் தூதுக்
கன்னவ னியையுங் கொல்லோ"

எனப் பதிலுரைத்தா ளென்றால் அவள் பெருமை அளவிடற்பாலதோ. "இந்திரனை மணப்பதற்கு என் மனம் இசைதல் வேண்டும். இயையவும் இயையும். ஆனால் அம்மனத்தை விட்டு ஒருபோதும் நீங்காமல் குடிகொண்டிருக்கின்றான் நளன் எனவே என தெண்ணமெல்லாம் இயக்குமக் கள்வன் இந்திரற்கிணங்கவிடான், சிறிது அவன் அகல்வானாயின் அவ்வற்றம்நோக்கி வானவேந்தனை மணக்க யான் நேர்ந்திடுவேன். மற்று, அவன் அகல்வதுவோ அருமை. யான், என் செய!" எனக் கையற்று நிற்பாள்போல், மறுக்குமச் செயலைத் தன் செயலாகக் கூறாது நளனுக் குரிமையாக்கிய நயமொழி நவின்றாள். பெருந்தகைக் குலத்தில் வந்தார் நயமொழி வழங்கும் பெருமையிது அவர்க் கியற்கையாமே.

பெருந்தகைச் செவ்வி பயில்தரும் நயமொழி இங்ஙனமமைவதாகப் பெருமித மறவர்புக்கு மகண்மறுத்ததையும் போதும் சுவைசில இலதென் றென்றும் ஓதுதலுரியதன்று. தன்னரண் காத்துநின்ற வீரரைநோக்கிப் பகைப்படை எழுந்துவந்த வேந்தன், "நும்தலைவன் மகளை எனக்கு மணஞ்செய்து தருதிர். பின்னர்ப் பகை தீர்ந்துபோவோம்" என உரைக்க அவர்,

ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்
கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்.

[ஒள்ளிய வாளையுடைய வீரர் கோபித்தெழுந்து, தேன் ஒழுகும் நறியமாலையை உடையவள் பொருட்டாக அவளது இடையின் அழகைக் கருதி நினக்குமுன் கொள்ள வந்தவர்களது யானையின் கொம்புகள், எங்கள் கருங்கண் உடைய அப்பெண்ணின் வெண் கட்டிலிற்குக் கால்களாய் நிற்கின்றன]

என மறுத்த பரிசு ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலையுள் பொலியக் காண்பீர். மெல்லியல் தமயந்திக்கு அவளுரை ஒக்கும். வன்மைமிகு வாளுழவர்க் கிதுவு மொசகும்.

"மதுகரம்."

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு] வெளிவருகின்றது. [3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,
மங்கயாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஆஸ்திரேலியாவில் தொல்லை :— ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட வேலைநிறுத்தத்தால் உண்டாகிய தொல்லை இன்னும் அடங்கியபாடில்லை. வேலை நிறுத்தக்காரர்கள் கலகம் செய்தும் பொதுஸ்தாபனங்களில் வெடிகுண்டுகளை எறிந்தும் வருகிறார்களாம். போலீசார் போதிய படி முயற்சி எடுத்து வருகின்றனர் என்று தெரிகிறது.

***

சென்னைச் சர்வகட்சி மஹாநாடு:—நேரு அறிக்கையைப் பற்றிச் சிந்திக்கவும், இனி சைமன் கமிஷன் விஷயமாய்ச் செய்யவேண்டிய வேலையை நிர்ணயிக்கவும் சென்னையில் அக்டோபர் மாதம் 6ந் தேதி சர்வகட்சி மஹாநாடு நடைபெறும். அம்மஹா நாட்டிற்குத் தலைவராய் ஸ்ரீ பெஸண்டு அம்மையாரைச் சர்வகட்சி மஹாநாட்டுக் கமிட்டியார் தேர்ந்துள்ளார்கள்.

***

டாக்டர் சாப்ரு:—இப்பொழுது சென்னை ராஜதானியில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் டாக்டர் சாப்ரு அவர்கள் திருச்சி சென்றகாலை, திருச்சி வக்கீல்களும், பொதுஜனங்களும் அவருக்கு உபசாரம் செய்தனர். டாக்டர் சாப்ரு உபசாரக் கூட்ட மொன்றில் பேசிய பொழுது; சென்னை வாசிகள் நுண்ணிய புத்தியை மெச்சியும் ஸர்-முத்துசாமி ஐயர், பாஷ்யமையங்கார் முதலிய மேதாவிகளைப் புகழ்ந்தும் கூறினார்.

***

ஆப்கானிஸ்தானத்தில் அரசியல் முறை :— ஆப்கன் மன்னர் மேனாட்டு யாத்திரையின் பயனாக அரசாங்கத்தில் ஜனப்பொறுப்பு ஏற்படுமாறு சில மாறுதல்கள் செய்ய மந்திரிமார்களுடன் யோசித்து வந்ததின் முடிவாக, ஒரு மந்திராலோசனை சபை ஏற்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று காபூல் பத்திரிகையொன்று கூறுகிறது. அச்சுச்சட்ட விஷயமாய் அதிகாரிகளுக்குள் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறதாம். சிலர் பத்திரிகைகளுக்குப் பூர்ண சுதந்தரம் இருக்கவேண்டு மென்கின்றனர் என்றும், சிலர் நிபந்தனை சில இருக்கவேண்டு மென்கின்றனர் என்றும் தெரிகிறது.

***

செத்தது பிழைத்தல் :—உலகம் புகழும் தாவரசாஸ்திரியான ஸர் ஜெகதீசசந்திரபோஸ் வியன்னா நகரில் ஒரு தவளையையும், தக்களிச் செடியையும் விஷம் கொடுத்துச் சாகவைத்து மீண்டும் உயிர் உண்டாக்கிக் காட்ட அங்குவந்திருந்த ஆராய்ச்சிக்காரர்கள் வியந்தனராம். கடைசியாக அவர் கூறியதாவது:—'மனிதன் தன் அறியாமையால் தாவரத்திற்கும், பிராணிகளுக்கும் பொருந்தாத வித்தியாசத்தைக் கற்பித்துள்ளான். தாவரம் இடம்விட்டுப் பெயராத பிராணியாகும். ஜந்துக்கள் நகரும் தாவரமாகும். ஜீவராசிகள் முழுதும் உயிரும் உணர்ச்சியும் பெற்றுள்ளன'.

***

இரங்கூன் மாதர் சங்கம்:—இரங்கூன் இந்திய மாதர் சங்கத்தினர் டாக்டர் முத்து லக்ஷிமிக்கு ஒரு விருந்து அளித்தனர். அக்காலை மிஸஸ் எஸ். பி. எஸ். ஐயரால் ஒரு உபசாரப் பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. Dr. முத்துலக்ஷிமி அம்மாள் பதிலளிக்கையில் மாதர் முன்னேற்றம் அவசியம் என்றும் பால்யவிவாகம் ஒழியவேண்டு மென்றும், விதவா விவாகத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்றும், பர்மாவில் பெண்கள் அதிக உரிமை பெற்றிருப்பது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் வழக்கம்போல் கூறிமுடித்தார். வந்தவர்க்குச் சிற்றுண்டிகள் வழங்கக் கூட்டம் கலைந்தது.

சர்வதேச சங்கம்:—1929-வருஷத்தில் சர்வதேச சங்கத்தின்செலவிற்காகபிரஞ்சுகவர்ன்மெண்டார் 2702600 பிராங்ஸ் தரவேண்டுமென்று வந்த தீர்மானம் பிரஞ்சு காபினட்டின் அங்கீகாரத்தைப் பெற்றதென்று பாரிஸ் செய்தி கூறுகிறது.

***

இந்தியத் தோட்டக் கூலிகள் இறந்தனர்:—தென் அமெரிக்காவில் டமரோ ஜியார்ஜ் என்னுமிடத்திலுள்ள கரும்புத்தோட்டத்தில் ஒப்பந்த வேலைசெய்து வந்த இந்தியத் தொழிலாளர்களில் 775 பேர் சட்லட்ஜ் என்னும் கப்பலில் வந்துகொண் டிருக்கையில் அவர்களில் 25 பேர் திடீரென இறந்தனர் என்று தெரிகிறது.

***

பாரசீகத் தாசியின் உபதேசம் : — பாரசீகத்துப் பெண்கள் சங்கக் கூட்டத்தில் பாரசீகத்து அரசி கூறியதாவது :—நமது நாட்டுமாதர் இப்பொழுது புதுவாழ்வு தொடங்கியுள்ளார். உலகத்துள்ள மற்ற நாட்டாரைப்போல் நாமும் வளர்வதல்லாமல், நமது நாட்டின் முன்னேற்றத்தையும் நடைபெறச் செய்யவேண்டும், கைத்தொழில் வர்த்தக வளர்ச்சியும் அதனால் செல்வப் பெருக்குமே ஒரு நாட்டை உயர்த்துகிறது. மேல்நாட்டார் அடைந்த பெருமையெல்லாம் வர்த்தகத்தாலும், செல்வத்தாலுமே. அந்நாடுகளில் மாந்தர் அகாலமரணமடையாததற்குக் காரணம் சுகாதார வசதிகள். இவையெல்லாம் நம்மிடம் உண்டாகவேண்டும். இதற்குக் கல்வி அவசியமாகும். மற்றொன்றும் கவனிக்கத்தக்கது. நமது நாடு இப்பொழுதுதான் முன்னேற்ற மடையத் துவக்கியுள்ளது. இந்நிலை மாதர்களும் புருஷர்களும் செய்யவேண்டுவது ஒன்றுளது. அதாவது நாட்டு சாமான்களையே நீங்கள் ஆதரிக்கவேண்டும். அப்பொழுது தான் வர்த்தகமும் கைத்தொழிலும் பெருகும். செல்வப் பெருக்கும் உண்டாகும். செல்வம் இருந்தால் கல்வி, சுகாதாரம் வைத்தியவசதி ஏற்பட்டுவிடும். எனவே இன்றுமுதல் நீங்கள் எல்லோரும் சுதேசிய விரதம் கொள்ளவேண்டும்."

189023

***

ஸ்ரீமதி கமலா சடோபாத்யாயா : — அகில இந்திய மாதர் சங்கத்தின் காரியதரிசியான கமலா சடோபாத்தியாயா, சிம்லாவில் ஒரு பத்திரிகைப் பிரதிநிதியினிடம் விவாக வயது மசோதாவைப்பற்றியும், பெண்கள் செய்ய வேண்டிய வேலை என்னவென்பது பற்றியும் கூறியதாவது :—

உலகமெங்கும் பெண்கள் முன்னேற்ற மடைந்துவரும் இந்நாளில் இந்தியப் பெண்கள் கண்ணைமூடிக் கொண்டிருத்தல் கூடாது. இந்திய அரசியல் இயக்கத்தில் பெண்கள் தலையிடாது இருப்பதனால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தைப் பெண்கள் உணராதிருப்பது வருந்துதற்குரியது. பெண்கள் துணையிலாது ஆண்களால் மாத்திரம் அரசியல் இயக்கத்தைத் தீவிரமாய் நடத்துதல் முடியாது. நிற்க, விவாக வயது மசோதாவைப் பல வைதிகர்கள் எதிர்த்தபோதிலும், அரசாங்கத்தார் பின் போகாது சட்டம் செய்வதற்கானதைச் செய்தல் அவசியம். இம்மசோதாவை முகமதியர்களிற் சிலர் எதிர்ப்பதின் காரணம் விளங்கவில்லை. பெண்கள் முன்னேற்றத்தில் அபிமானங்கொண்டோ ரனைவரும் இம்மசோதாவை ஆதரிக்கவேண்டும். மேலும் இனிமேலாவது பெண்கள் கண்விழித்து வீடுவிட்டு வெளியிடமும் வரவேண்டும். சட்டசபைக்கும், மற்ற முனிசிபல் ஜில்லா போர்டு போன்ற பொதுஸ்தாபனங்களுக்கு அபேக்ஷகராய் நிற்கவேண்டும். தன்கையேதான் தனக்குத் துணை என்றபடி, நாம் பொதுஸ்தலங்களில் செல்வாக்குப் பெற்றாலன்றி முன்னேற முடியாது.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.